Nallur Branch Library
NATIONAL LIBRARY SECTION,
MUNICIPAL LIBRARY SERVICES,
JAFFNA.

சாளரம்

கதவு 03 (16) காற்றலை 01

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
யாழ்ப்பாணம்
-5-1-1993

# பாராட்டுகிறோம்

கடந்த ஆகஸ்ட் திங்கள் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வில் மிகச் சிறப்பாக சித்தியடைந்த தமிழீழ மாணவர்களை நாம் பாராட்டுகின்றோம்.

மின்சாரம் இல்லை; எரிபொருள் இல்லை; பொருளாதாரத் தடை; பாடநூல்கள், பயிற்சி நூல்கள் விலை அதிகம் அல்லது இல்லாத நிலை.

பாடசாலைகள் மீது வானூர்திகள் குண்டு வீசும் காலம். இடிந்து கிடக்கும் பாடசாலைகள். ஏதிலிகள் தங்ககங்களாகச் செயற்படும் பாடசாலைகள். இடம் பெயர்ந்து இருக்க இடமின்றி குறைந்த வசதிகளுடன் செயற்படும் பாடசாலைகள்.

இப்படியான சூழலிலும் மனந்தளராத இம்மாணவர்கள் மற்றையோருக்கு நல்ல முன்னுதாரணமாகின்றனர்.

340000 மாணவர்கள் கலந்து கொண்ட இத் தேர்வில் முதலாம், இரண்டாம், ஐந்தாம் இடங்களை தமிழீழத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாம் இடத்தை புனித ஜொன்ஸ்பொஸ்கோ வித்தியாலயமும்(199), இரண்டாம் இடத்தை ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயமும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், (197) ஐந்தாம் இடத்தை சென்பற்றிக்ஸ் கல்லூரியும், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமும் (194) பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி கோட்டம் நுணாவில் அமிர்தாம்பிகை பாடசாலையில் 40% மாணவரும் (30மாணவர்கள் தோற்றி 12 மாணவர்கள் சித்தி அடைந்தனர்) புனித ஜொண்ஸ் பொஸ்கோவில் 37% மாணவரும் (189 - 70) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வடமராட்சிக் கோட்டதில் வசதிகள் குறைந்த பாடசாலையான தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் கோட்டத்திலேயே கூடுதலான (16) மாணவர்களை தேர்ச்சி பெற வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கட்டான சூழலிலும், வசதி குறைந்த நிலையிலும் இம்மாணவர்களின் — ஆசிரியர்களின் — பாடசாலையின் — பெற்றோரின் முயற்சிகளையும் அருஞ்செயல்களையும், மனந்தளராத நிலையையும் பாராட்டுகின்றோம்.

## இந்த இதழில்..

- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ நோபல் பரிசு பெற்ற வீராங்கனை ரிகோ பெர்டா மெஞ்சு
- ☐ 'ஒளிரும் பாதை'
- ☐ யாழ்ப்பாணத்தில் ஒரு திரைப்படக்கழகம்
- ☐ இடிக்கப்பட்ட பாபர் மசூதியும் இந்தியா எதிர் கொள்ளும் சிக்கல்களும்
- ☐ திருமலை நடராசன் கதையில திருத்தம்
- ☐ தெறிப்பு
- ☐ இலக்கியச் சொல்லின்பம்
- ☐ இசையமைப்பாளர் கண்ணனுடன் ஒரு சந்திப்பு
- ☐ ஹைக்கூ வடிவ கவிதைகள்
- ☐ கண்ணில் தெரியும் கதைகள்
- ☐ உலகில் தலை சிறந்த கல்விக் கூடங்கள் 10
- ☐ வாத்தியார் வீட்டு விறாந்தை
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ போர் சூழலிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை !
- ☐ அரும்பு
- ☐ விளையாட்டு



# நோபல் பரிசு பெற்ற வீராங்கனை ரிகோ பேர்டா மெஞ்சு

மத்திய அமெரிக்காவில் குவாதிமாலா என்ற இடத்திலுள்ள பழங்குடி மக்களின் நல உரிமைகளுக்காகப் போராடி வருபவர் ரிகோ பேர்டா மெஞ்சு என்கிற இப்பெண்மணியாவார்.

பதினொரு ஆண்டுகளாக மெக்சிக்கோவிலிருந்து கொண்டு தன் தாய் நாடாகிய மத்திய அமெரிக்காவிலுள்ள குவாதிமாலா எனும் இடத்தே வாழும் ஒரு கோடி மக்களில் பாதிக்கு மேற்பட்ட செவ்விந்திய மக்களின் நல உரிமைகளுக்கும், 'மாயா'ப் பண்பாட்டிற்குமாகப் போராடி வருகின்ற இப் பெண்மணியின் பதினேழு வயதுச் சகோதரனை வெள்ளைக்கார ஸ்பானிய இராணுவம் உயிரோடு எரித்துக் கொன்றது.

கரடுமுரடான மலைச்சரிவுகளிடையே பயிர் செய்து வறுமையில் வாடும் செவ்விந்திய விவசாயிகளுடைய நலவுரிமைகளுக்கெனப் போர்க்குரல் எழுப்பிய அவளின் தந்தையான வின்சென்ற் மெஞ்சுவை இராணுவம் சுட்டு எரித்துக் கொன்றது.


இவைகளுக்கெல்லாம் மேலாக வெள்ளைக்கார இராணுவத்தின் பாலியல் வன்முறைக்குள்ளான இப் பெண்மணியின் தாயின் உயிருள்ள உடல் மரத்திற் கட்டப்பட்ட நிலையில் பூச்சியும், புழுவும், நாய்களும், கழுகுகளும் தின்னும்படியாகத் தன்னுயிர் போக்கிற்று.

இத்தனைக் கொடுமைகளைச் சுமந்துகொண்டிருந்த இப் பெண் 1981ல் குவாதிமாலாவிலிருந்து நாடுகடத்தப்பட்டு மெக்சிக்கோவிற்கு வந்தார்.

வளமற்ற மலைச்சரிவுகளுள், குறைந்தளவு விவசாயத்தையும், கோப்பித் தோட்டங்களில் இடையிடையே, காய்பறித்தலைத் தங்கள் வேலையாகவும் கொண்டிருந்த மெஞ்சு குடும்பம் ஏழ்மை மிக்கது; இந்நிலையிலும் மெஞ்சு ஸ்பானிய மொழியைக் கற்றுணர்ந்திருந்தார்.

ஐநூறு வருடங்களாக குவாதிமாலாவில் வசித்து வரும் ஸ்பானிய வெள்ளையர்களின் கொடுமையை எதிர்த்து நடத்திவரும் போராட்டத்தின்மூலம் ஒரு லட்சத்திற்கும் மேலான செவ்விந்திய இனத்தவர் அழிந்துள்ளனர். இந் நிலையிலும் மனம் தளராது போராடிவரும் மெஞ்சுவிற்கு நோபல் சமாதானப் பரிசு இப்போது கிடைத்துள்ளது. □

## ஓவியம் வாக்கியம்



தமிழரின் புகழ்மிக்க அறிவாலயமான யாழ்.நூலகத்தின் முன்னைய தோற்றம் தான் இது. பேரினவாத அரசின் கொடுங்கரங்களால் கொளுத்தப்பட்டு, தன்னகத்தே இருந்த அறிவுப் பொக்கிசங்களான நூல்களையெல்லாம் இழந்த நிலையில் காணப்படும் அதன் துயரத் தோற்றத்தினை இன்று நாம் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இத்துயரினை கவிதை வரிகளாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.

பழம் பெருமை மிக்க நாடு பெரு. இன்கா நாகரீகத்தின் தொட்டிலாக விளங்கிய நாடு. இயற்கை வளங்கள் மிகுந்த நாடு. ஸ்பானியரும், பிரான்சியரும் ''பெருவைப் போல் பெறுமதிமிக்க'' என்ற 18ம் நூற்றாண்டு கூற்றை இன்றும் பயன்படுத்துகின்றார்கள்.

# 'ஒளிரும் பாதை'

—'அறிவொளி'—

லீமாவை தலை நகராகக் கொண்ட பெரு 21,800000 (1990) மக்கள் வாழ்கின்றனர். 1281215 ச. கி. மீ. நிலப்பரப்பை கொண்ட இந்நாட்டின் நெறி உரோமன் கத்தோலிக்கமாகும். ஸ்பானிய, குவாச்சுவ, அயிமேரா மொழிகள் பேசப்படுகின்றன.

உலகின் மிகப் பெரிய ஆறுகளில் ஒன்றான அமேசன், பெரு நாட்டில் தோன்றி கிழக்கு நோக்கி பாய்கின்றது. பெரு நாட்டின் தென் எல்லையில் உள்ள டிட்டிக்காக்கா என்னும் ஏரி கடல் மட்டத்திலிருந்து 3800 மீ. உயரத்தில் உள்ளது. உலகில் மிக உயரமான இடத்தில் உள்ள ஏரி இதுவாகும்


ஸ்பானிய ஆட்சியில் இருந்து 1824ல் விடுதலை அடைந்த இந்நாட்டில் சில குடும்பங்களின் கைகளிலேயே நாட்டின் முழு வளமும் இருக்கின்றது. பெரும்பாலான இந்திய குடி மக்கள் வறுமையில் மிகக் கேவலமான வாழ்க்கையை நடத்துகின்றனர். இது அங்கு இரு நாடுகள் உள்ளது போன்ற தோற்றத்தைக் கொடுக்கின்றது.

இன்று பெரு நாட்டின் சர்வாதிகாரியாக ஜனாதிபதி பியூயிமோரி இருக்கின்றார்.

இந்நாட்டில் ஏழை மக்களின் விடிவிற்காக என இடது சாரி கொள்கையை கொண்ட புரட்சிகர விடுதலை இயக்கமான 'ஒளிரும் பாதை' என்னும் இயக்கம் (சென்டேரோ லூமினோசோ) கடந்த 12 ஆண்டுகாலமாக போராடிவருகின்றது.

இவரை கடவுளைப்போல் வழிபடுகின்றார்கள்.


இவர் அரிக்குயிப்பா (Arequipa) என்ற நகரில் பிறந்தார். இவருக்கு அகவை 57 ஆகும். இவர்



—அபிமேல் குசுமான்—

இவ்வியக்கமானது வெளிநாடுகளின் உதவியின்றி தம் பெருவின் வளத்திலேயே தங்கி போராட்டத்தை வளர்த்து வந்தது.

ஐயக்குச்சோவிலுள்ள குயமங்கா பல்கலைக் கழகத்தில் உளவியல் பேராசிரியராக இருந்த 1960ம் 1970ம் ஆண்டுகளில் தனது புரட்




(படத்தைப் பார்க்கவும்) இதன் ஆற்றல் மிகுதலைவராக அபிமேல் குசுமான் விளங்கி வருகின்றார்.

இவரை மேற்கு நாடுகள் பயங்கரவாதி, என வர்ணிக்கின்றன. ஆனால் ஏழை இந்திய மக்கள்

சிகர எண்ணங்களை வளர்த்துக் கொண்டார் எனகூறப்படுகின்றது.

இவர் கடந்த செப்டெம்பர் திங்கள் 12 ஆம் நாள் காட்டிக்கொடுக்கப்பட்டோ அல்லது, எதிர்பாராத விதமாகவோ கைது செய்யப்பட்

(5ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் ஒரு திரைப்படக் கழகம்!

அ. யேசுராசா

திரைப்படம் ஆற்றல்வாய்ந்ததொரு கலை வடிவம். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மேதைமை நிறைந்த திரைக்கலைஞர்கள் பலர், ஏராளமான உன்னதத் திரைப்படங்களை மனித குலத்திற்கு உருவாக்கி அளித்துள்ளனர். ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு என்ற ஆரம்ப நிலையினைக் கடந்து, நவீனக் கலைவடிவங்களில் ஒன்றாக அது நிலைநிறுத்தப்பட்டும், நீண்ட காலமாகிவிட்டது.

என்றாலும் தமிழ், ஹிந்தி, ஹொலிவூட் திரை உலகுகள் தமது தயாரிப்புகள்மூலம், 'திரைப்படம் ஒரு பொழுதுபோக்குச் சாதனம், என்ற கருத்தையே பெரிதும் நிலைநிறுத்த முயல்கின்றன; சிறிய அளவில்தான் புறநடையான படங்களைக் காணலாம்.

இலாபநோக்கை அடிப்படையாகக்கொண்ட முதலாளித்துவ சமூக அமைப்பே, இதன் காரணம். பாலுணர்வு, வன்முறை, மேலோட்டமான நகைச்சுவை என்பவற்றைக் கலந்து தயாரிக்கப்படும் - உண்மை வாழ்விலிருந்து விலகிய - 'பட்டியல்முறைப் படங்கள்' பெருமளவில் இலாபத்தை ஈட்டிக் குவிப்பதால், அவையே பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன. விநியோகத் துறையிலும் வியாபார நோக்கே ஆதிக்கம் செலுத்துவதால், கலைத்தரமான படங்களிற்கு, உரிய வகையில்- பரந்த அளவில் திரையிடப்படும் வாய்ப்பும் மறுக்கப்படுகிறது; இதனால், கலைத்திரைப்படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் அரிதாகவே உள்ளது.

மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை — உண்மைத்தன்மையுடன் — திரைப்பட அழகியல் அம்சங்களைப் பேணி, கலாரூபமாகப் படைக்கப்படுபவையே, கலைத் திரைப்படங்களாகும். 'மனிதன்' பற்றிய அக்கறையே அவற்றின் உள்ளுறையாகும்; இலாபநோக்கை அவை கருத்தில் எடுப்பதேயில்லை.

உலகின் வெவ்வேறு மொழிகளில் உருவாக்கப்படும் கலைப்படங்களைப் பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பினைத் தரமான இரசிகர்களுக்கு வழங்குவதே, திரைப்படக் கழகங்களின் முதன்மை நோக்கமாகும்; வெளிநாட்டுத் தூதரகங்கள், கலாசார மையங்கள்மூலம் இத்தகைய படங்கள் பெறப்பட்டு உறுப்பினர்களுக்குக் காட்டப்படுகின்றன. அத்தோடு, திரைப்பட இரசனையை வளர்க்கக்கூடிய கருத்தரங்குகளை நடத்துதலும், பிரசுரங்களை வெளியிடுவதும் இவற்றின் ஏனைய நோக்கங்களாகும். திரைப்படக் கழக இயக்கம் இந்திய மாநிலங்களில் வலுப்பெற்று வருகிறது.

உலகப் புகழ்பெற்ற திரைப்பட நெறியாளரான சத்யஜித்ரே, 'கல்கத்தா திரைப்படக் கழகத்தை' நண்பர் சிலருடன் சேர்ந்து அமைத்துச் செயற்பட்டார்; அதில் பார்க்கநேர்ந்த கலைப்படங்கள் அவரதும், (பின்னாளில் புகழ்பெற்ற திரைப்பட விமர்சகரான) சிதானந்த தாஸ் குப்தாவினதும் திரைப்பட ஆளுமையை உருவாக்குவதில், முக்கிய பங்கை ஆற்றின. அத்தோடு, ஆரம்பகாலத்திலிருந்து தான் இறக்கும்வரை 'இந்தியத் திரைப்படக் கழகங்களின் சம்மேளனத்தின்' தலைவராகச் சத்யஜித்ரே இருந்தார் என்பதுமான செய்திகள், திரைப்படக் கழகங்களின் முக்கியத்துவத்தினை எமக்கு உணர்த்துவனவேயாகும்.

சிறீலங்காவில் கொழும்பு, பேராதனை, கண்டி, கம்பஹா, காலி போன்ற நகரங்களிலும் ஏனைய இடங்களிலும் திரைப்படக் கழகங்கள் உள்ளன. இவை பிறமொழித் திரைப்படங்களைத் திரையிட்டுச் சிங்கள இரசிகர்களின் திரைப்பட இரசனையை வளர்த்து வருகின்றன; மறுவளமாக நல்ல சிங்களத் திரைப்படங்கள்உருவாக (அத்தகைய படங்களை இரசித்து வரவேற்கச் செய்வதன்மூலம்) துணைபுரிந்தும் வருகின்றன.

துரதிர்ஷ்டவசமாக தமிழீழப் பிரதேசங்களில், இத்தகைய சூழல் தற்போது இல்லாதிருக்கின்றது. ஆனால் காத்திரமான முன்னோடி முயற்சியொன்று நினைவுக்கு வருகிறது. சுமார் பதின்நான்கு ஆண்டுகளின் முன்னர், யாழ். திரைப்பட வட்டம் என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் இயங்கியது. 3.2.1979 முதல் 5.2.1982 வரை, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 நல்ல திரைப்படங்களை, யாழ். 'றிம்மர் மண்டபத்தில்' தனது உறுப்பினர்களுக்கு, அவ்வப்போது அது திரையிட்டுக் காட்டியது; இவையாவும் 16 மி. மீ. படங்களாகும் (திரையரங்குகளில் காட்டப்படுவது 35 மி மீ. படங்கள்). யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறையில் இருந்த திரு. ஏ. ஜே. கனகரத்தினா இதன் தலைவர்; க. சட்டநாதன், அ. யேசுராசா, சசி, கிருஷ்ணமூர்த்தி, கோ. கேதாரநாதன் ஆகியோர் செயற்பாட்டு அலுவலர்களாக இயங்கினர். 'யாழ். பிரான்சிய நட்புறவுக் கழகத்தின்', பணிப்பாளராக இருந்த திரு. குலேந்திரன், 16 மி. மீ. திரைப்படங் காட்டும் கருவியை வழங்கி உதவினார்.

உலகப் புகழ்பெற்ற நெறியாளர் பலரின் புகழ்பெற்ற திரைப்படைப்புகளுடன் பரிச்சயப்படும் வாய்ப்பினை, இக்கழகம் யாழ்ப்பாண இரசிகர்களுக்கு ஏற்

படுத்திக்கொடுத்தது. சேர்ஜி ஐஸன்ஸ்ரைன், ஜிறி வெயிஸ், வேர்னர் ஹேர்ஸொக், பிரான்சுவா ட்ரூஃபோ, ஜோஸே ஜியோவான்னி, செம்பென் உஸ்மான் ஆகியோர் இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய நெறியாளர்களிற் சிலராவர்.

நகரத்தில் இரண்டு மனிதர்கள், அஞ்சற் காசுக் கட்டளை, பிரான்சில் இரண்டு ஆங்கிலேயப் பெண்கள் - (பிரான்ஸ்); கோழை, ஓநாய்ப் பொறி, போலின்- (செக்கோஸ்லவாக்கியா); யுத்தக் கப்பல் பொட்டெம்கின், மக்ஸிமின் இளமைப் பருவம் இரண்டு பாகங்கள் - (ரஷ்யா); அகீரே! இறைவனின் சீற்றம், பாலம்- (ஜேர்மனி) ஆகியன இங்கு திரையிடப்பட்ட மிக முக்கியமான படங்களாகும். இவை பல்வேறு உலகத் திரைப்பட விழாக்களில் விருதுகளைப் பெற்றவையுமாகும்.

1925இல் தயாரிக்கப்பட்டு, உலகத் திரைக் காவியங்களில் ஒன்றாக இன்றும் வியக்கப்படும் யுத்தக் கப்பல் பொட்டெம்கின் திரைப்படத்தினை, 1979 இல் (54 ஆண்டுகளின் பின்னராவது!) யாழ்ப்பாணத்தில் பார்க்கும் வாய்ப்பு, இக்கழகத்தினாலேயே ஏற்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். புகழ்பெற்ற கொம்யூனிஸ்ற் போராளியான 'யூலியஸ் பூஸிக்'கின் தூக்குமேடைக் குறிப்புகள் நூலின் திரைவடிவம் இங்கு காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான பிறமொழிப் படங்கள் ஆங்கில எழுத்துக்களுடனேயே (sub titles) திரையிடப்பட்டன; ஆயினும் ஆங்கிலம் தெரியாதவர்களுக்காக கதைச் சுருக்கம், நெறியாளர் பற்றிய விபரங்கள்கொண்ட கல்லச்சுப் பிரதிகள் தமிழில் வழங்கப்பட்டன.

அரசுப் பயங்கரவாதம் இங்கு தலைவிரித்தாடத் தொடங்கிய சூழலில், வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்து திரைப்படப் பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் (படப்பிரதிகள் சேதமடையலாம் என்பதால்) ஏற்பட்டன. இதன் காரணமாக இத்திரைப்படக் கழகம் தனது செயற்பாட்டினை இழந்து போனமை, துரதிர்ஷ்டவசமானது.

பத்து ஆண்டுகளின் பின்னர் இப்பொழுது, நிலைமை மேலும் மோசமாகிவிட்டது; நல்ல திரைப் படங்களைப் பார்க்கும் வாய்ப்பு முற்றிலும் இல்லாது போய்விட்டது. ஆயினும் நல்ல திரைப்படங்களின் வீடியோப் பிரதிகள் சேகரிக்கப்பட்டுக் காட்டப்படுவதன்மூலம், நமது மக்களின் திரைப்பட இரசனையை வளர்க்கலாம்; நவீன உலகின் திரைக்கலை வளர்ச்சிப் போக்கினுடனான நமது தொடர்பு அறுபட்டுவிடாதும், பேணிக்கொள்ளலாம். □

## வீடும் மரமும்

வீட்டுக்கு ஒரு
மரம்
வளர்ப்போம்
வீடு
இருந்தால் தானே...

## வறுமை

நாங்கள்
வெறும்
வயிற்றுடன்
படுப்பதில்லை
வயிறு நிரம்ப
பசியுடன் தான்

—யோ. பரஞ்சோதி
(குன்றின் குரல்)

## ஒளிரும் பாதை...

3ம் பக்கத் தொடர்ச்சி...

டார். இவருக்கு பெரு அரசு ஆயுள் தண்டனையை வழங்கியுள்ளது.

இரண்டு முறை 'ஒளிரும் பாதை' இயக்கம் அழியும் நிலை ஏற்பட்டது. அதை தனது ஆற்றலால் மீண்டும் குசுமான் வளர்த்தெடுத்தார்.

இவரின் கைதின் பின் 'ஒளிரும் பாதை' யின் நிலை என்ன என்பது பலரின் கேள்வி


'ஒளிரும் பாதையின்' கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் சிறந்த நிர்வாகம் நடப்பதாக எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

சிலந்தி வலையை திருத்தி அமைப்பது போல் 'ஒளிரும் பாதை'யும் தன்னை காப்பாற்றிக் கொள்ளும் என்றும், பெருவில் சில குடும்பத்தலைவர்களின் சுரண்டலும் அடக்கு முறையும் இருக்கும் வரை 'ஒளிரும் பாதையின்' வளர்ச்சியை தடுக்க முடியாதென்றும் சிலபார்வையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். □

## இன்கா நாகரிகம்

தென் அமெரிக்காவில் மேற்கு கரையோரம் 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து வந்த ஒரு வகை அமெரிக்க இந்திய மக்களின் நாகரிகமே இன்கா நாகரிகமாகும். இன்று ஈக்வடார், பெரு, பொலிவியா, சிலி ஆகிய நாடுகள் இருக்கும் பகுதியில் இன்கா மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தம் அரசனை இன்கா என அழைத்தனர். அதிலிருந்து இவர்கள் இன்கா மக்கள் என அழைக்கப்பட்டனர்.

# இடிக்கப்பட்ட பாபர் மசூதியும், இந்தியா எதிர்கொள்ளும் சிக்கல்களும்.



இந்தியாவின் நாலாவது பெரிய மாநிலம் உத்திரப்பிரதேசமாகும். மக்கள் கூடுதலாக வாழும் மாநிலமாக இம்மாநிலம் விளங்குகின்றது. இங்கு 138760417 (1991) மக்கள் வாழ்கின்றனர்.

இந்தியாவின் தற்போதைய மக்கள் தொகை 849930861 (1991), 1981ல் இந்திய மக்கள் தொகை 685184692ஆக இருக்கும்போது அங்கு 75,512,432 முசுலிம் மக்கள் வாழ்ந்தார்கள்.

உத்திரப் பிரதேசத்தில் 1528ம் ஆண்டு மொகலாய சக்கரவர்த்தி பாபரின் காலத்தில் பாபர் மசூதி கட்டப்பட்டது.

அது இராமரின் பிறந்த இடம் என்றும், அங்கிருந்த இராமர் கோயில் இடிக்கப்பட்டே மசூதி கட்டப்பட்டது என்பதும் இந்து நெறி (மதம்) யாளர்களின் கருத்தாகும்.

இந்துக் கோயில் இருந்தமைக்கான எத்தகைய வரலாற்று சான்றுகளும் இதுவரை கிடைக்கவில்லை.

பாரதிய ஜனதாக் கட்சி, ராஷ்டிரிய சுயம் சேவக் சங், விசுவ இந்து பரிசத், பஜ்ராம்தள் போன்ற அமைப்புக்கள் இந்தியா இந்துக்களுக்குரியது என்ற கோட்பாட்டை உடையவை.

அவை அரசியல் காரணங்களுக்காகவும், தம் கோட்பாட்டிற்காகவும் இந்துநெறி வெறியை தூண்டி வருகின்றன.

முசுலிம் அரசர்களால் இடிக்கப்பட்டு அதன் மேல் மசூதிகள் கட்டப்பட்டவை என அவர்கள் 1000க்கு மேற்பட்ட இடங்களை குறிப்பிடுகின்றார்கள்.

அயோத்தி சிக்கல் நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

1885ம் ஆண்டு மசூதிக்கு அண்மையில் உள்ள நிலப்பகுதி தன்னுடையது என இராக்பார் தாசு என்பவர் போட்ட வழக்கு இன்று பல வடிவங்களை பெற்றுள்ளது. இன்றும் அந்நிலை குறித்து வழக்குகள் தொடர்கின்றன.

நெறி (மத) சார்பற்ற நாட்டை அமைத்த தந்தை எனச் சொல்லப்படும் நேருவின் காலத்தில் 1949ம் ஆண்டு இம் மசூதிக்குள் இராம லாலா சிலை ஒன்று கட்டாயமாக வைக்கப்பட்டது. அன்றைய அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை.

அதை வழிபட இந்துக்களுக்கு ஒரு பக்கமாக சிறிய வழி ஒன்று தரப்பட்டது. 1989ல் ராஜீவின் காலத்தில் மசூதி இந்துக்களின் வழிபாட்டுக்காக திறந்துவிடப்பட்டது.

அதேவேளை, 1989ல் மசூதிக்கு அருகில் இராமர் கோயிலுக்கான அடிக்கற்கள் போடப்பட்டபோது அரசு வாளாதிருந்தது.

1991ல் மசூதிக்கு அண்மையில் இருந்த 2774 ஏக்கர் நிலத்தை உத்திரப்பிரதேச பா. ஜ. க. கையகப்படுத்தியது.

அப்பகுதியில் இந்து நெறியாளர் 'கரசேவை' என்னும் பெயரில் கோயில் கட்ட ஆரம்பித்தனர்.

இந்திய முறை மன்று, உத்திர பிரதேச அரசு (பா. ஜ. க.) நிலத்தை கையகப்படுத்தியது தவறு என்றும், கோயில் கட்டுவதை நிறுத்தும்படியும் தீர்ப்பளித்தது.

—'அறிவொளி'—

முறைமன்றின் தீர்ப்புக்கு மதிப்பளியாமல் 'கரசேவை' தொடர்ந்தது. அதை அடுத்து நடுவன் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என மிரட்டிய பின் அச்சேவை சிறிது காலம் நிறுத்தப்பட்டது.

நடுவன் அரசுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை என்றும், திட்டமிட்டபடி 'கரசேவை' டிசம்பர் 6ம் திகதி தொடரும் எனவும் இவ்வமைப்புக்கள் அறிவித்தன.

இவ்வமைப்புக்கள் எல்லாம் தம் இரகசிய திட்டப்படி டிசம்பர் 7ம் திகதி (1992) பாபர் மசூதியை இடித்து அழித்தன.

பிரித்தானிய ஆட்சியின் விளைவால் பல்வேறு அரசுகளாக இருந்த இந்தியா, ஒரு அரசையுடைய நாடாக வளர்ச்சியடைந்தது.

இந்தியா இந்துக்களுக்கே உரியது என மசூதியை உடைத்ததன் மூலம், இந்தியா துண்டு துண்டாக உடையும் சாத்தியக்கூறுகள் கூடியுள்ளதாக பார்வையாளர்கள் கருதுகின்றனர். □

திருமலை நடராசன் கதையில் திருத்தம்

# நடராசன் உடல் சின்னக் கந்தளாயில்தான் புதைக்கப்பட்டது.



"திருமலை நடராசன் சாவுற்ற பின்னர் அவனின் உடலைத் திருக்கோணமலை நகரத்து எல்லையில் அமைந்துள்ள இடுகாட்டிற்குக் கொண்டு சென்ற தமிழ் மக்கள் அங்கேயே அவனுடலைப் புதைத்தனர்

இளைஞர் திங்கள் இதழாகிய சாளரம் - திருமலை நடராசன் கதையை 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் நவம்பர் இதழ்களில் வெளியிட்டது.

திருக்கோணமலையின், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டுகளில் ஒன்றாகிய 1957 ல் இந்நிகழ்வு பற்றிய செய்திகள், சுதந்திரன் வார இதழில் (10- 2- 1957) வெளிவந்திருந்தது.

இந்நிகழ்வு நடைபெறும் வேளையில் திருக்கோண மலையில் வாழ்ந்து இன்று தமிழீழத்தின் வடக்கிலிருந்து வெளிவரும் நாளிதழின் ஊடாகத் தமிழுக்குப் பணி செய்யும் அன்புடைய ஒருவரின் நற்கவனத்தின் மூலமாக,

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னால் நடந்த இந்நிகழ்வு பற்றி எழுதியுள்ள முறையில் ஊறு இருப்பதான உண்மை எமக்குக் கிட்டியது.

நடந்ததோர் நிகழ்வை செய்தி வடிவமாகப் படைக்கும்போது அவ்வடிவ மூலங்கள் பழுது அற்ற வகையிலிருக்கப் பார்த்திடவேண்டியது படைப்பாளருக்கான அறப்பண்பும், கடனுமாம் - என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

எனவே, இக் கதையில் குறிப்பிட்டவாறு பாலம் போட்டாறு, தம்பலகாமம் ஆகிய இடங்களைக் கடந்து நடராசன் புகழுடல் கந்தளாய் ஊரின் இடுகாட்டினை அடைந்திடாது; திருக்கோணமலை நகரமக்களால் சின்னக் கந்தளாய் என்று குறிக்கப்படும் நகரத்து எல்லையிலுள்ள இடுகாட்டையே அடைந்திட்டது.'' எனத் தந்திட்ட தகவல்களினால்,

இராசவரோதையர் வாயிலாகக் ''கந்தளாயில் நடராசன் உடலைப் புதைக்கவேண்டும்'' என்று பந்தியொன்றில் கூறியிருக்கும் எனது எண்ணங்களைத் திருப்பிப் பெற்றும், திருத்தியும் கொள்ளுதற்கு ஏதுவான இத்தகு சிறந்த தகவல்களைத் தந்திட்டவருக்கு எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமலை நடராசன் - கொடி உயர்த்திய போது வீழ்ந்திடவில்லை என்பதும், கந்தளாய் - சின்னக்கந்தளாய் என்று இரு இடங்கள் திருக்கோணமலை மாவட்டத்தே இருக்கின்றமையும் இப்போது தெரியவந்துள்ளதை யாவரும் புரிந்து கொள்வதற்கு வழிதந்த சாளரம் இதழ் - அவ்விதழின் வாசகர்கள் - ஆகியோருக்கு என் பணிவான வணக்கங்களும், நன்றிகளும் உரியது.

அன்புடன்
திருமலை யோகேந்திரம்

# நாம் அப்படியே இருக்கிறோம்

கிறிசுதோபர் கொலம்பசு அமெரிக்காவை கண்டு பிடித்த 500ம் ஆண்டு நினைவு நாள் அண்மையில் கொண்டாடப்பட்டது.

அமெரிக்காவுக்கு கிறித்தவத்தையும், நாகரிகத்தையும் கொண்டு சென்றவர்களின் முன்னோடியாக இவர் போற்றப்படுகின்றார்.

இவர் அங்கு செல்லும் போது அமெரிக்காவில் ஆதிக் குடிவாசிகளான இந்தியர்கள் இருந்தார்கள் என்பதும் அவர்கள் பெருமளவில் கொல்லப்பட்டார்கள் என்பதும் பலருக்குத் தெரியாது.

இன்று அவர்களின் எதிர்ப்பால் அமெரிக்காவில் இந்நாள் எதிர்பார்த்த வண்ணம் பெரிதாக கொண்டாடப்படவில்லை.

கிறிசுதோபர் கொலம்பசு கிறித்தவத்தையும், நாகரிகத்தையும் 500 ஆண்டுகளுக்கு முன் கொண்டு வந்தார் என்கிறார்கள். ஆனால் 500 ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படி வாழ்ந்தோமோ அந்த நிலையில் தான் இன்றும் இருக்கின்றோம் என்கிறார்கள் அமெரிக்க ஆதிக் குடிவாசி இந்தியர்கள்.

## தெறிப்பு

கனம் சாளரம் ஆசிரியர் அவர்கட்கு.

56 வருடங்களின் முன் கப்பல் ஓட்டிய தமிழரை நேரில் சந்தித்து வெளியிட்ட விபரங்களை வாசித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தமிழரின் பெருமையை மேலும் மேலும் அறிந்து மகிழ்கிறேன். வல்வெட்டித் துறை சுந்தரம் மேஸ்திரியிடம் மேலும் விபரங்களை கேட்டுப்பிரசுரிக்கவும்.

ஏரம்ப மூர்த்தி என்பவர் கப்பலின் (அன்னபூரணி) உரிமையாளர். இவருக்கு இரு புத்திரிகள் இருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் சொர்ணம்மா, இரத்தினம் ஆகும். ஏரம்பமூர்த்தியின் அண்ணன் சிதம்பரப்பிள்ளை எனவும், சிதம்பராக் கல்லூரியின் பெயர் இவர் பெயரை கொண்டது எனவும் அறிகிறேன். இவை, எனக்குத் தெரிந்த விபரங்கள்.

ஏரம்பமூர்த்தியின் மகள் சொர்ணம்மாவின் பரம்பரைப் பூட்டப்பிள்ளைகள் மாவீரர்களாகவும் போராளிகளாகவும் உள்ளனர் எனவும் அறிகிறேன். ஏரம்ப மூர்த்தி அவர்களின் பூட்டப் பிள்ளைகள் வறுமையில் வாழ்வதாகவும் அறிகிறேன். இவர்களைச் சந்தித்து மேலதிக விபரங்களை அறிய முயலவும்.

இப்படிக்கு,
செல்வி. மனோகரி மனோகரன்,
சுண்டுக்குளி கல்லூரி.
(7ம் ஆண்டு மாணவி)

## சேகுவேரா பற்றி இன்னும் எழுதியிருக்கலாம்

சாளரத்தின் முதலாமாண்டு இதழ்களின் தொகுப்பு வெளிவர இருப்பதாக அறிந்தேன். தயவு செய்து எனக்கு அந்தத் தொகுப்பு அனுப்புவீர்களா? விலை விபரம் பற்றி தெரிவித்தால் உடன் அனுப்பி வைப்பேன். நான் தொடர்ந்தும் உங்கள் வாசகராக இருக்க வேண்டும். சந்தாப்பணம் கட்டினால், நீங்கள் மாதந்தோறும் உங்கள் படைப்பை எனக்கு அனுப்புவீர்களா? தயவு செய்து உலகின் விரமிகு வரலாறு, விஞ்ஞானிகளின் சுவையான அனுபவங்கள் என்பனவற்றை அறிய ஆசை. சேகுவேரா பற்றிப்படித்த போது இன்னும் எழுதியிருக்கலாம் என கூறத் தோன்றுகிறது. தயவு செய்து எனக்காக இத்தனையும் சேர்த்து அமையுங்கள். சஞ்சிகை நீண்ட நாள் நிலைக்க வேண்டும். அதனால், அட்டையை கொஞ்சம் ஆயுள் நீடிக்க அமைத்தால் நன்று.

செல்வி ச. ஜிவிதலதா,
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## சாளரம் வாழி

உணர்ச்சி யுற்ற சமுதாயம்
உரிமை கேட்டுப் போரிடவே
உணராப் பகையின் கொடூரத்தால்
உயிரே பறக்கும் வேளையிலும்
உருக்காய் பிறக்கும் சந்ததிகள்
உணரத், தாங்கும் கருத்துடனே
வீறு நடையிடும் சாளரமே
வளர்பிறை போல் நீ வாழியவே!

சுரேஷ்,
வேலணையூர்.

## சாளரம் எம்மை முழுமனிதனாக்குகிறது!

நான் சாளரத்தின் அன்பு வாசகன்

சாளரத்தின் மூலம் நான் அறிவியலில் இருந்து சமூக வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களையும் அறிந்து கொள்கிறேன். 'CHALARAM MAKES A FULLMAN' என்று கூறினால் மிகையாகாது.

க. சிறிராஜ்குமார்,
59, குருசோ வீதி,
சுண்டுக்குளி.

## மூளைக்கு கொஞ்சம் வேலை!

1. கிளி கூண்டுக்குள்ளிருக்கிறது. அதற்குள் அது உட்கார்ந்துகொண்டிருக்கும்போது கூண்டு எடைபார்க்கப்படுகிறது. பின்பு, பறந்துகொண்டிருக்கும்போது எடை பார்க்கப்படுகிறது. இரு எடைகளும் ஒன்றாக இருக்குமா?

2. ஒன்பது சிறுவர்கள் ஒன்பது நிமிடங்களில் ஒன்பது பக்கங்கள் எழுதுகிறார்கள். ஒரு பையன் எவ்வளவு நிமிடத்தில் ஒரு பக்கம் எழுதுவான்?

☐ விடை சரியா எனப் பார்க்க கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள்.

அந்தத் துறவியினுடைய குடிசை, ஊர்ப்புறத்தில் பெருவெளியின் ஓரமாகத் தனியாகக் கிடந்தது. ஆனால், முதியவர், இளையவர், சிறுவர் என்று பலரும் போய்வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஏன் அங்கே செல்கிறார்கள்?

பலர், துறவியாரைக் காண்பதில் மங்கலம் – மன நிறைவு பெறுவதற்காகவே போகிறார்கள்; சிலர், அவர் வாயிலிருந்து பிறக்கும் ஒரு சொல்லைக் கேட்பதே வாழ்த்தாகக் கருதிப் போய் வருகிறார்கள்.

# இலக்கியச் சொல்லின்பம்

— வீ. பரந்தாமன் —

இவ்வளவு பெருமைக்குரிய அந்தத் துறவிதான் யாரோ?

அவர்தான், ஞாலத்தைக் குறளால் அளந்த-தனக் குவமையில்லாத – அறவாழி அந்தணர்; வள்ளுவர்!

குடிசையின் முற்றத்திலே ஒரு மரக்குற்றியின் மீது அமர்ந்து ஓலையில் எழுத்தாணியால் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்.

அப்பொழுது முதியவர் ஒருவர் அங்கு வந்தார்.

வள்ளுவர், எழுந்து வரவேற்று, ஓர் இருக்கையில் முதியவரை இருத்திவிட்டு, அவரின் நலத்தை வினாவிக் கொண்டார்.

சிறிது நேரம் வாய்வாளாமல் அமைதியாகக் கழிந்தது.

முதியவர் மெல்லப் பேசத் தொடங்கினார்.

“ஐயரே! இந்த உலகத்திலே நன்மைகளைவிடத் தீமைகளே மிகவும் உள்ளனவ ்க நான் உணருகிறேன்; இத்தீமைகளில் எல்லாம் மிகவும் கொடியது எது என்பதைத் தாங்கள் சொல்லியருள வேண்டும்''!

“பெரியவரே! தாங்கள் உரைத்தது உண்மையே கொடியவற்றுள் கொடியது வறுமையே என்பது எனது கருத்தாகும்''.

“ஐயரே! வறுமையில் கொடியது வேறு எதுவும் இல்லையா?''

வள்ளுவர் புன்னகை பூத்தார்; அவருடைய அறிவு விழித்தெழுந்தது; உடனே இலக்கிய உணர்வும் சேர்ந்தெழுந்தது. வறுமையில் கொடியது வேறில்லை என்று சுவையாகச் சொல்லவேண்டும்! வலியுறுத்திச் சொல்ல வேண்டும்!

அவர் வாயிலிருந்து சொன்முத்துக்கள் ஒவ்வொன்றாகச் சொரிகின்றன.

“இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது''

வறுமையிலும் கொடியது யாதென்றால், வறுமையிலும் வறுமையே கொடியது!

என்ன அருமை! என்ன ஆழமான விளக்கம்! என்ன சுவையின்பம்!

வறுமையிலும் கொடியது ஏதோ ஒன்று இருக்கிறது என்று சொல்லப்போவது போல் குறளின் முற்பகுதி தொடங்குகிறது; பின்பு யாரும் எதிர்பாராத வகையில் வறுமையிலும் கொடியது வறுமையே என்று முடிகிறது!

இந்தக் கூற்றுக்கப்பால் வேறொரு விளக்கத்துக்கு இடமில்லாதபடி வறுமையே உலகில் மிகவும் கொடியது என்பதை நெஞ்சில் ஊன்றிப் பதித்துவிட்ட வள்ளுவனின் சொல்வன்மையை எப்படிப் புகழ்வது? எப்படி வியப்பது?

கிழவர் அந்த முதுமையிலும் துள்ளினார்; வள்ளுவரின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார். கைகளைப்பற்றி திரும்பத்தி ும்ப முத்தமிட்டார்! கிழவர் பெற்ற இன்பம் கண்களில் நீர் முத்துக்களாகச் சிந்தின!

பின், வள்ளுவர் வறுமையே மிகவும் கொடியது என்றதற்கான காரணங்களை விளக்கினார். வறுமையானது ஒருவனுடைய சிறப்புகளோடு அவனது வாழ்வு முழுவதையும் எரித்துவிடும்!

அந்த வகையிலே நோக்கினால், தீயிலும் வறுமை தீயது என்று விளக்கி முடித்தார்.

அவ்வளவு நேரமும் வள்ளுவருடைய ஆழமான அறிவையும் சொல்லின்பத்தையும் செவி வழியாகப் பருகிக்கொண்டிருந்த கிழவனார்க்கு ஆராமை தீரவில்லை. இன்னும் வள்ளுவரைப் பேசவிட்டுப் பருக வேண்டும் என விரும்பினார்.

'ஐயரே! நெருப்பிலும் வறுமை கொடியது என்றீர்கள்; அது எவ்வளவு அதிகம் கொடியது? என்றும் விளக்கியருள வேண்டும்''

“நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடரிது''

இவ்வாறு பட்டென்று பதின்மொழி கொடுத்தார் வள்ளுவர்.

கிழவனார் திகைத்துப்போனார்.

நாங்கள் கூறுவதாயிருந்தால், நெருப்பிலே உறங்கினாலும் உறங்கலாம், ஆனால், வறுமையில் உறங்கவே முடியாது என்றுதானே கூறியிருப்போம்? ஆனால், இதில் தீயிலும் வறுமையது கொடுமையின் மிகுதிப்பாடு எவ்வளவு? என்பதற்கு விளக்கம் இல்லாமல் இருக்கிறதே!

வள்ளுவருடைய கூற்றிலே அந்த விளக்கமும் (கொடுமையின் அளவும்) இருக்கிறது!

எப்படி?

வள்ளுவர் கையாண்ட சொற்களை கூர்ந்து நோக்குங்கள்!

உறக்கத்தை குறிக்க இரண்டு வெவ்வேறு சொற்களைக் கையாண்டு இருக்கிறார்.

அச்சொற்களை ஆண்டதிலேதான் வள்ளுவரின் அறிவு நுட்பமும் திறமையும் விளங்குகின்றன.

அவை; துஞ்சல், கண்பாடு என்பன.

துஞ்சல், ஆழ்நிலை உறக்கத்தைக் குறிக்கும்; கண்பாடு, மேனிலே உறக்கத்தை (கண்மூடுமளவிலான சிறுதூக்கம்) குறிக்கும்,

இப்பொழுது குறளின் பொருளைப் பார்க்கலாம்.

நெருப்பிலே ஆழமாக - அமைதியாக உறங்குதலும் முடியலாம்; ஆனால், வறுமையில் சிறிதேனும் கண்மூடலும் முடியாது!

நெருப்பிலே உறங்கலாமாம்; வறுமையிலே கண்மூடவும் முடியாதாம்!

இப்பொழுது வறுமை நெருப்பைவிட எவ்வளவு அதிகம் கொடுமையானது என்று புரிகிறதன்றோ? இவ்வாறு கூற வள்ளுவருக்கல்லால் வேறு யாருக்கு முடியும்?

என்னே நுட்பமான சொல்லாட்சி!

வள்ளுவரிடத்திலே அறிவு வீறு மாத்திரமன்று; சொல்வீறு, இலக்கிய நயம்பட உரைக்கும் இன்பமெல்லாம் நிறைய இருக்கின்றன.

கிழவனார் பெற்ற உவகைக் கிறுகிறுப்பிலிருந்து விடுபட சிலமணிநேரம் கழிந்தது.

வள்ளுவனாரை வாழ்த்தி வணங்கிவிட்டு மெல்ல நடந்தார்!

நூலறிமுகம்

வெளியீடு:-

## 'அரங்கம்' - கையேடு

இளந்தலைமுறையினரை உணர்வு பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டவும், இவர்களின் ஆற்றலை மேம்படுத்தவும், நல்லொழுக்முள்ள நாட்டுப் பற்றாளர்களை உருவாக்கவும் கல்விக் கூடங்களில் வளரும் கையேடுகள் உதவுவன.

இந்நோக்கை மையமாக வைத்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் அரங்கம் என்ற பெயரில் கையெழுத்து இதழினை ஆக்கம் செய்துள்ளனர்.

'சந்தர்ப்பம் உருவாக்கித் தந்த அணுகுண்டு,' 'பால் வெளியில் கருங்குழிகள்,' போன்ற பயன்தரு அறிவியற் கட்டுரைகளையும் சமகால நிகழ்வுகளை நினைவூட்டும் வகையிலான 'கதைகளாகும் வரலாறு' ஆகியவிடயத்துடன், கவிதைகள் சிலவற்றையும் தாங்கி வந்துள்ள 'அரங்கம்' இளைஞர் ஆற்றலை வளர்ப்பதற்கான களமாக அமையட்டும் என்று இம்முயற்சியை சாளரம் வரவேற்றுப் பாராட்டுகின்றது.

வெளியீடு:- 'அரங்கம்' – கையேடு
யா / உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்
கல்லூரி
உயர்தர மாணவர் மன்றம்

இன்று தமிழீழத்தின் எல்லாத் திசைகளிலும் விடுதலை எழுச்சிப்பாடல்கள் இசைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த எழுச்சிப் பாடல்கள் பலவற்றின் இனிய இசைக்குச் சொந்தக்காரர் தான் இசையமைப்பாளர் கண்ணன். இவரை செவ்வி காண்பதற்காக நாச்சிமார் கோவிலடியிலுள்ள இவரது இல்லத்திற்குச் சென்றோம்.

ஐம்பது வயதான கண்ணன் அவர்களுக்கு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாக நான்கு குழந்தைகள் உள்ளனர். இசையை முழு நேரத்தொழிலாகக் கொண்டுள்ளார். பல மாணவ, மாணவிகளுக்கு இசை கற்பிக்கிறார் எமக்காக தனது நேரத்தினை ஒதுக்கி இசை அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

# இசையமைப்பாளர் கண்ணனுடன் ஒரு சந்திப்பு



**● இசைத்துறையில் எவ்வாறு உங்களுக்கு ஆர்வம் உண்டானது?**

என்னுடைய தந்தை எஸ். முத்துக்குமாரு (சக்கர பாணி) ஓர் இசைக்கலைஞர். நாடகக்கலையிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. இந்தியக்கலைஞர்களுடன் அவருக்கு நிறையத்தொடர்புகள் இருந்தன. அப்போது எம். கே. தியாகராஜபாகவதர் இலங்கைக்கு வருவதற்கு எனது தந்தையாரும் ஏற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்தார். இவ்வாறான சூழல் தான் முதலில் இயல்பாகவே என்னை இத்துறையில் ஆர்வம் கொள்ள வைத்தது. தொடர்ந்து, சங்கீத பூஷணம் உடுவில் சண்முகரத்தினம், சங்கீத பூஷணம் இராசலிங்கம், வீணை வித்துவான் கிருஸ்ணமூர்த்திஐயர் ஆகியோருடன் இசை பயின்றதும், இங்கு வந்த இந்தியக்கலைஞர்களுடன் அதிகம் பழக நேர்ந்ததும் எனது இசைத்துறை ஆர்வமும் ஈடுபாடும் அதிகரித்தமைக்கு காரணமெனலாம். பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு பதினெட்டு வயதில் இசையுடன் என்னை முழுமையாக இணைத்துக் கொண்டேன்.

**● உங்கள் இசைக்குழுவை எப்போது உருவாக்கினீர்கள்?**

முன்பு இங்கு கோவில் திருவிழாக்களில் இசை நிகழ்ச்சிகள் நடாத்த வேண்டுமென்றால், இந்தியாவிலிருந்துதான் கலைஞர்கள் வரவேண்டும். அதே சமயம், இந்தியக்கலைஞர்களுக்குத்தான் இங்கு அதிக வரவேற்பும் இருந்தது. 1960 களில் இந்திய இசைக்குழுக்கள் இங்கு வருவது அரசினால் தடைசெய்யப்பட்டது. அதன் பிறகுதான் உள்ளூர் கலைஞர்கள் ஒன்று கூடி இங்கொரு இசைக்குழுவினை அமைப்பது குறித்து ஆராய்ந்தோம். பிறகு, 'கண்ணன் கோஷ்டி' என்ற பெயருடன் கொஞ்சக்கலைஞர்கள் சேர்ந்து இசைநிகழ்ச்சிகள் நடாத்தி மக்களுடன் அறிமுகமானோம்.

**● உங்கள் 'கண்ணன் கோஷ்டி' இலங்கை முழுவதும் பிரபல்யமானது எவ்வாறு?**

அப்போது – 1967ம் ஆண்டு என்று நினைக்கிறேன். தினகரன் பத்திரிகை நிறுவனம் நடாத்திய மாபெரும் களியாட்டு விழாவில் எமது இசைக்குழு பங்கு பற்றியது. இதன் மூலம் எமக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது மட்டுமல்லாது, தினகரன் நிறுவனத்தினது முதற்பரிசும்

கிடைத்தது. இதன் காரணமாக 1968இல் இலங்கை வானொலியில் எமக்கு இடம் கிடைத்தது. அப்போது ஆர். கிருஸ்ணமூர்த்தி, வயலின் இராதாகிருஸ்ணன், மிருதங்க வித்துவான் சிவபாதம் ஆகியோர் எமது குழுவில் இருந்தனர்.

நாம் இலங்கையில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று இசை நிகழ்ச்சிகள் நடாத்தியுள்ளோம். எல்லாப்பகுதிகளிலிருந்தும் வரவேற்கப்பட்டோம். இலங்கை வானொலியில் ஒப்பந்தஅடிப்படையில் 1970 தொடக்கம் 1983 வரை பணியாற்றியுள்ளோம். அப்போது சுமார் முந்நூறு பாடல்கள் வரை இசையமைத்துள்ளேன்.

● **திரைப்படங்களுக்கு இசையமைத்த அனுபவங்கள் பற்றி...?**

சிங்கள இசையமைப்பாளர்களுடன் இணைந்து சுமார் ஏழு சிங்களப் படங்களுக்கு பணியாற்றியுள்ளேன். இசைக்கலைஞர் நேசன் தியாகராஜா என்பவருடன் அக்காலகட்டத்தில் இணைந்து ஓர் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டேன். அதன்படி 'கண்ணன்–நேசன்' என்ற பெயரில் கோமாளிகள், ஏமாளிகள், தெய்வம் தந்த வீடு ஆகிய இலங்கைத்தமிழ் திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளேன். இப்படங்களில் குறிப்பாக 'கோமாளிகள்' படத்தின் இசை தென்னிந்திய திரைப்படங்களில் வரும் இசைக்கு நிகராக அமைந்ததென பலர் பாராட்டினர். 'தெய்வம் தந்த வீடு' படத்திற்கு இசையமைத்ததுடன் அதில் நடித்தும் இருக்கிறேன்.

திரைப்படங்களைத்தவிர தாசீசியஸ், பாலேந்திரா, மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் போன்றோரின் பிரபலமான நாடகங்களுக்கும் நான் இசையமைத்துள்ளேன். அத்துடன் சிங்களக் கலைஞர்கள் பலரை தமிழ்ப் பகுதிகளில் நாமே அறிமுகம் செய்தும் உள்ளோம். பிறேமசிறி கேமதாச, விக்ரர் ரத்நாயக்க, சுஜாதா அத்தநாயக்க போன்றோர் எமது இசைக் குழுவில் பாடியிருக்கின்றனர், கொழும்பில் தென்னிந்தியப் பாடகி வாணி ஜெயராம் கலந்து கொண்ட விசேட இசைநிகழ்ச்சியொன்றிற்கும் நாம் இசைவழங்கி நல்ல பாராட்டினைப் பெற்றோம். இசையமைப்பாளர் திரு. றொக்சாமி தலைமையில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றது, 1983ம் ஆண்டுடன் கொழும்பில் எமது இசைநடவடிக்கைகள் யாவும் முற்றுப் பெற்றுவிட்டன எனலாம்.

● **இசைத்துறையில் உங்களின் வழிகாட்டி - குரு என்று யாரை குறிப்பிடுவீர்கள்?**


இயல்பான ஆர்வமும் பற்பல அனுபவங்களுமே நான் வளர காரணமாகவிருந்தன. ஆனாலும், எனது வழிகாட்டி எனக் குறிப்பிடுவதானால் இசையமைப்பாளர் காலஞ்சென்ற திரு. றொக்சாமி அவர்களையே கூறுவேன். கொழும்பில் நான் வானொலியில் பணியாற்றும் போதும், திரைப்படங்களுக்கு இசையமைத்த



மகன் சத்தியனுடன்



இலங்கை வந்திருந்த இளையராஜாவுடன்



'தெய்வம் தந்த வீடு' படத்தில் நடிகராக

போதும். பல வழிகளிலும் எனக்கு உதவியாகவும், வழி காட்டியாகவும் இருந்தவர் அவர். ஒரு திரைப்படத்திற்கு இசையமைப்பது என்பது வித்தியாசமான அனுபவம். வெறும் இசை நிகழ்ச்சிகள் நடாத்திய அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு திரைப்படத்திற்கு இசையமைத்துவிட முடியாது. இது சம்பந்தமான தொழில் நுட்பங்களையும், வழிமுறைகளையும் எனக்கு கற்றுத் தந்தவர் றொக்சாமி அவர்கள் தான்.

● **இந்திய இசையமைப்பாளர்களில் தங்களுக்குப் பிடித்தவர் யார்?**

பிடித்தவர் பிடிக்காதவர் என எவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. எல்லோரும் இசையமைக்கிறார்கள். ஒவ்வொருவரது இசையிலும் ஒவ்வொருவிதமான சிறப்பம்சங்கள் இருக்கின்றன என்றுதான் நான் கருதுகிறேன்.

● **உங்கள் பிள்ளைகளுக்கும் இசை ஆர்வம் உள்ளதா? எதிர்காலத்தில் உங்கள் வாரிசாக, உங்கள் இடத்தினை நிரப்புபவர்களாக அவர்கள் வருவார்களா?**

எனது பிள்ளைகளுக்கு இசையில் ஆர்வமுள்ளது. எனது முத்தமகன் சத்தியன் (முரளி) என்னோடு இணைந்து இசையமைப்பில் உதவியாக இருக்கிறான். அண்மையில் வெளியான செஞ்சோலை இசைநாடாவிற்கு அவனே முழுமையாக இசையமைத்துள்ளான். எதிர்காலத்தில் அவர்கள் வளர்ச்சியடைந்து என்னுடைய இடத்தை நிரப்புவதல்ல-அதைவிட அதிகமான ஆற்றல் மிக்கவர்களாகவும் வரலாம் என்கிற நம்பிக்கை உண்டு.

● **நீங்கள் பல திரைப்பட, மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளீர்கள். இப்போது பல எழுச்சிப் பாடல்களுக்கும் இசையமைத்து வருகின்றீர்கள் தங்களுக்கு மிகவும் பிடித்த நீங்கள் இசையமைத்த பாடல் எது?**

திரைப்படப்பாடல்களில் 'சம்மதமா சொல்லித் தரவா...' என்ற பாடல். எழுச்சிப் பாடல்களில் 'வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்...' பாடல். நெய்தல் இசைநாடாவுக்காக நான் இசையமைத்த 'வெள்ளி நிலா' பாடல் கடல் சார்ந்த இசையுடன், அழகாக வரவேண்டுமென கற்பனை செய்து கொண்டே ஒரு நாள் யாழ். பல்கலைக்கழக வீதி வழியாக சென்று கொண்டிருந்தேன். அப்போது கைலாசபதி கலையரங்கு என் கண்ணில் தெரிய, இக்கலையரங்கில் மகாகவியின் 'புதிய தோர் வீடு' நாடகத்திற்கு இசையமைத்த ஞாபகங்கள் மனதில் வந்தன. அந்நாடகத்தில் மகாகவியின் 'சிறுநண்டு கரைமீது படமொன்று கீறும், சிலவேளை அதைவந்து அலை கொண்டுபோகும்' என்ற பாடல் இசையும் ஞாபகத்தில் வந்தது. உடனே வெள்ளி நிலா பாடலுக்கான இசைவடிவம் மனதில் தோன்றிவிட்டது.

● **திரைப்பாடல்கள், மெல்லிசைப்பாடல்கள், போராட்ட எழுச்சிப் பாடல்கள் இம்மூன்றிற்கும் இசையமைப்பதில் வித்தியாசங்கள் உள்ளனவா?**

கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாக வைத்து ஜனரஞ்சகமாக செய்வதே மெல்லிசையாகும். திரை இசை அப்படியானதல்ல. எழுச்சிப்பாடல்களை இசையமைக்கும்போது அப்பாடல் வரிகளில் உள்ள வீரம், எழுச்சி, ஈகம் போன்ற தன்மைகளை இசையிலும் வடிக்க வேண்டியுள்ளது. எனவே, இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகிறது.

● **சில பாடல்களை கேட்கும் போது அந்தப்பாடலின் மெட்டினை வேறு எங்கோ கேட்டதைப் போன்று மனதில் தோன்றும். உதாரணமாக - நெய்தல் இசை நாடாவில் வெளியான 'ஆழக்கடல் எங்கும்' 'புதிய வரலாறு' ஆகிய பாடல்களுக்கிடையே இசையில் ஓர் ஒற்றுமை இருப்பதாகப் படுகிறதே! அது ஏன்?**

சில ராகங்களை வைத்துக் கொண்டுதான் பல பாடல்களை இசையமைக்கிறோம். அப்படி செய்கையில் இப்படியான சாயல்கள் தோன்றலாம். உதாரணத்திற்கு இப்போது பாருங்கள், இது கல்யாணி ராகம். இதை இரண்டு வகையில் இசையாக்கிக்காட்டுகிறேன். (ஆர்மோனியத்துடன் கல்யாணி ராகத்தினை இரண்டு முறையில் எமக்குப் பாடிக் காட்டுகிறார்) பார்த்தீர்களா இரண்டும் வித்தியாசமாக இருந்தாலும் ஒரே சாயல் தோன்றுகிறதல்லவா? அதேநேரம், போராட்ட எழுச்சிப் பாடல்களில் வீரம், சோகம் என்பனவற்றை இசையில் காட்டவேண்டும் என்பதால் கபஸா, பஸா, பஸரி, காரி, ஸகபா, ஸமா, ஸமதா போன்ற சுரப் பிரயோகங்களையே எல்லாப் பாடல் மெட்டுக்களிலும் பாவிப்பதால் அவை சில வேளைகளில் ஒரே மாதிரியானவை போன்று தோன்றலாம்.

● **இசைதானா உங்கள் தொழில்? இதன் மூலம் வாழ்க்கைக்கான வருமானம் கிடைக்கிறதா?**

இசைதான் எனதுதொழில். பலர் என்னிடம் இசை பயில வருகின்றார்கள், அத்துடன் இசைக்கருவிகளை பழுது பார்க்கும் தொழில் நுட்ப வேலைகளும் என்னால் முடியும். இதன் மூலமாக ஓரளவு பொருளாதார வசதியுடன் வாழ்கிறேன். இந்திய இராணுவம் இங்கிருந்த காலகட்டத்தில் நான் எனது வீட்டை விட்டு இடப்பெயர்ந்திருந்தேன். எனது வீட்டில் அப்போது இந்திய இராணுவம் தான் இருந்தது நான் பாதுகாத்து வைத்திருந்த எனது இசைக்கருவிகள் சிலவற்றை அவர்கள் உடைத்து நாசமாக்கி விட்டார்கள்.

இப்போது நான் ஆன்மீகத்தில் என் மனதை அதிகம் ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். சந்தோசங்களைக்கண்டு துள்ளிக் குதிப்பதும் இல்லை. துன்பங்கள் வரின் சோர்ந்து போவதும் இல்லை. நாளையே இறப்பு வந்தாலும் மகிழ்வுடன் எதிர் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டது.

நாம் உரையாடிக் கொண்டிருந்தபோது திரு. கண்ணன் அவர்களிடம் இசைபயில வந்த மாணவர்கள் பலர் வெளியே காத்திருந்தனர். இவ்வளவு நேரமும் மகிழ்ச்சியுடன் தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்ட அவரிடம் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டோம். ●

—விவேக்

Nallur Branch Library

சுன்னாகத்தில் இவற்றை நியாய விலையில்
தரமானதாக தெரிவு செய்திட
நீங்கள் வேறு எங்கும் அலையத் தேவையில்லை!

**சாய்ப்பு சாமான்கள்**
**அழகு சாதனப் பொருட்கள்**
**பலசரக்குப் பொருட்கள்**

# இராஜேஸ்வரி
# பல்பொருள் களஞ்சியம்

புகையிரத நிலைய வீதி,
**சுன்னாகம்.**

# ஹைக்கூ வடிவ கவிதைகள்.

அமைதி காப்பதென
ஆயுதங்கள் முழங்கின
தகர்ந்த வீடொன்றுள்

சிதைந்த நிலையில் காந்தியின் படம்!
(1987 - 1989)

அடர்ந்து கறுத்து
இருண்டது வானம்

தாரகை மிளிர்ந்தது!

□•□

□•□

புத்தரின் சிலைநிழலில்
இட்லரின் அரியணை

தார்மீக அரசாட்சி!

இருளதன் இறுக்கத்துள்ளும்
இனிமைமிகு கூவல்கள்

குயில்களின் கனவில் கதிரவன்!

□•□

□•□

இரண்டு படாத இலங்கை
அழகு தான்

வரை படத்தில்!

வளைந்திருந்த
எம் தெருக்களும் நிமிர்ந்தன

முகங்களில் மாவீரர் முகவரி!

□•□

வீழ்ந்த வீரனின்
கைகள் விரிந்தன

புதிய கரங்களில் கனம்!

—செ. போ. சிவனேசு

# பொன்னக்கா

**-புவி-**

முல்லைத்தீவின் அந்த மூலைக் கிராமத்தில் சிலகாலம் தங்கியிருந்து தங்களது சில வேலைகளை மேற்கொள்ள பொருத்தமான வீடு ஒன்றினைத் தேடிக்கொண்டிருந்தனர் அந்தப் போராளி இளைஞர் நால்வர்.

ஓரிடத்தில் அவர்களுக்குப் பொருத்தமான, வசதியான வீடு ஒன்று கண்ணில்பட்டது. ஒரு முகாம் அமைப்பதற்கோ, முழு நாளும் தங்கியிருக்கவோ அவர்கள் வீடு தேடவில்லை. சிலநாட்கள் தங்குவதற்கு மட்டுமே. வீட்டின் முன்விறாந்தையே அவர்களுக்குப் போதுமானது.

அந்த வீட்டில் அதிகம் ஆட்களும் இல்லை. இரு பெண்மணிகள் மட்டுமே இருந்தனர். ஒருவர்பெயர் பொன்னக்கா. நாற்பத்தைந்து வயதிற்கு மேலிருக்கும். மற்றவர் அவரது தமக்கை. அவருக்கு ஐம்பது வயதிருக்கும். இருவரும் திருமணமாகாதவர்கள். பொன்னக்காவின் வளர்ப்பு மகனொருவன் வெளிநாட்டில் இருந்தான். அவன் அனுப்பும் பணத்தின் மூலமும், காணியில் கிடைக்கும் வருமானத்தினாலும் ஓரளவு, பிரச்சினையின்றி அவர்களது சீவியம் போய்க்கொண்டிருந்தது.

பொன்னக்காவைப்பற்றி விசாரித்ததில் வீட்டில் இடம் தருவாவா என்கிற சந்தேகம் அந்த இளைஞர்களுக்கு ஏற்பட்டது.

அதிகமாக அயலவர்களுடனேயே அவர்கள் உறவாடுவது குறைவு. தாங்களும் தங்கள் பாடுமாக இருப்பவர்கள். இந்த இளைஞர்களுக்கு எவ்வாறு இடங்கொடுக்கப் போகிறார்கள் ...?

இருந்தாலும், நேராகச் சென்று பொன்னக்காவிடம் கேட்டுப் பார்ப்பதென்ற முடிவுடன் புறப்பட்ட, அந்த இளைஞர்கள் வளவின் உட்பக்கமாய் பூட்டப்பட்டிருந்த 'கேட்'டைத் தட்டினர் ஒருவரையும் காணவில்லை.



''அக்கா, அக்கா ...
அம்மா, அம்மா''

வீட்டினுள் ஒருவரின் சத்தத்தையும் காணவில்லை. மீண்டும் சத்தமாக கேட்டைத்தட்ட வீட்டின் முன் கதவு திறந்தது.

ஒரு பெண்மணி எட்டிப்பார்த்தார். 'என்ன?' என்று கேட்பது போல் இருந்தது பார்வை.

''அக்கா ஒருக்கா வாங்கோ. கேட்டைத் திறவுங்கோ''

தயக்கத்துடன் வந்த பெண்மணி கேட்டைத் திறக்காமலேயே அருகில் வந்து நின்றார்.

''பொன்னக்கா எண்டது நீங்கள் தானோ''

''இல்லை நான் அவாவின்ர தமக்கை. என்ன அலுவல் சொல்லுங்கோ''

''நாங்கள் இஞ்சை கொஞ்சநாள் தங்கவேணும் இவ்விடத்தில வசதியா வேற வீடு கிடைக்கேல்ல. எல்லா வீடுகளிலையும் ஆக்கள் கனக்க. அதால... உங்கட வீட்டில...''

சொல்லி முடிக்கும் முன்னரே அந்தப் 'பெண்மணியின் முகம் கறுத்துவிட்டது

கதைத்துக் கொண்டிருக்கும் போது பொன்னக்கா கடையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தா.

விசயத்தைச் சொன்னதும் பொன்னக்காவின் 'முகமும் கறுத்துப் போய்விட்டது.

''இஞ்சை இடமில்ல. வேறு எங்கையும் கேட்டுப் பாருங்கோ''

''எங்களுக்கு கனக்க இடம் தேவை இல்லை. விறாந்தையைத் தந்தால் மட்டும் காணும் கொஞ்சநாளைக்கு நிண்டுட்டு பிறகு போயிருவம்''

இளைஞர்கள் விட்டபாடில்லை. பொன்னக்கா எவ்வளவோ கதைத்துப் பார்த்தா. கடைசியில் தோல்விகாண வேண்டிவந்தது. இந்த இளைஞர்களை என்ன சொல்லியும் சமாளிக்க முடியாது என கருதியோ என்னவோ மௌனம்சாதித்தா.

அன்றுதொடக்கம் அடுத்தடுத்து பொன்னக்காவின் வீட்டிற்கு அவர்கள் போவார்கள். அந்நேரங்களில் எல்லாம் பொன்னக்கா முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுவா.

**கண்ணில் தெரியும் கதைகள்**

அவர்களை அங்கு தங்குவதற்கு வாய்திறந்து பொன்னக்கா அனுமதிக்கவில்லை. ஆனாலும், அங்கு வரவேண்டாம் தங்க வேண்டாம் என சொல்லவுமில்லை.

இந்நிலையில் அவர்கள் அங்கு அந்த விறாந்தையில் தங்க ஆரம்பித்து விட்டனர்.

பொன்னக்காவின் வீட்டு முன் கதவு பூட்டியே இருந்தது. பின் கதவால் தான் அவர்கள் வெளியே செல்வதும், வருவதும். அந்த இளைஞர்களின் முன்னிலையில் வருவதே இல்லை. வீட்டினுள் பேச்சொலி கூட பெரிதாக கேட்பதில்லை. மெல்லமாய் இரகசியம் பேசுவதைப் போலத்தான் கதைத்துக் கொள்வார்கள்.

இளைஞர்கள் வருவார்கள், போவார்கள். இடையிடையில் இரவில் தங்குவார்கள். சிலசமயம் வேறு எங்கேயும் இரவைக் கழிப்பார்கள்.

பொன்னக்காவின் வீட்டைச் சுற்றியிருந்த வேம்பு, மாமரங்களும் வளவினுள் இருந்த அதிகமான தென்னை மரங்களும் அங்கு குளிர்மையான சூழலை நிலைக்கச் செய்திருந்தன.

நல்ல வெய்யில் நேரங்களில் வேர்த்து களைத்துப் போய்வரும் இளைஞர்கள் அந்த வேப்பமரத்தின் கீழ் குளிர்ச்சியாக இளைப்பாறும் போது சுகமானதொரு அனுபவத்தைப் பெறுவார்கள்.

பொன்னக்காவின் முகமும் பார்வையும் மட்டும் இன்னும் குளிரவில்லை. சூடாகவே இருந்தன.

சில நாட்களின் பின் அந்த இளைஞர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். வேறு வீடு ஒன்று பார்த்துக் கொண்டு பொன்னக்காவிடமிருந்து விடை பெற்றுக் கொள்வது என்பது தான் அந்த முடிவு.

ஒரு நாள் மாலை பொன்னக்காவிடம் அவர்கள் இந்த முடிவைக் கூறினார்கள்.

''இன்னும் ரெண்டொரு நாளையில வேற இடத்துக்குப் போயிடுவம். பொன்னக்கா இனியெண்டாலும் கொஞ்சம் சிரிச்ச முகத்தோட இருங்கோ. எங்களை வெறுப்பா பார்க்காதேங்கோ''

அவர்களில் ஒருவன் இப்படிக் கூறியதும் பொன்னக்கா கொஞ்சம் அசடுவழிய சிரித்தா.

அடுத்தடுத்த நாட்களில் அந்த இளைஞர்களுடன் முன்னரைப் போலன்றி சகஜமாக கதைக்கவும், இடைக்கிடை தேனீர் கொண்டு வந்து கொடுக்கவும் தொடங்கி விட்டா.

அவர்களை வேறு எங்கேயும் போக வேண்டாமெனவும், தமது வீட்டிலேயே இருக்கும்படியும் வற்புறுத்தவும் ஆரம்பித்து விட்டா.

நாட்கள் செல்லச்செல்ல அந்த இளைஞர்களை தனது பிள்ளைகள் போல பாசத்துடன் நடத்தும் அளவிற்கு பொன்னக்காவிடம் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன.

ஏனைய போராளிகளும் அடிக்கடி வந்து போனார்கள். போராளிகளை கவனிப்பதிலும் உபசரிப்பதிலும் அந்தக் கிராமத்திலேயே பொன்னக்கா முதன்மையானவராக வந்து விட்டா.

இந்த மாற்றம் அந்த இளைஞர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

பொன்னக்கா என்றால் அப்பகுதியிலுள்ள எல்லாப் போராளிகளுக்கும் தெரியும்.

யாரேனும் ஒரு போராளி வீரமரணம் அடைந்து விட்டால் பொன்னக்காவின் வீடு மரண வீடாகவே காட்சி தரும்.

ஒரு தடவை – அந்த ஊரிலுள்ள வேறொரு வீட்டிற்கு சில போராளிகள் போய்வருவதைக் கண்டதும் பொன்னக்காவிற்கு கோபம் வந்து விட்டது.

''அவையல் குறைஞ்ச சாதி ஆக்கள் அங்க போய் சாப்பிடுறதெண்டால் இங்கை வரவேணாம்''

ஆத்திரத்தில் பொன்னக்காவிடமிருந்து வந்த இந்த வார்த்தையினைக் கேட்டதும் அந்த இளைஞர்களும் ஆத்திரப்பட்டார்கள்.

''அக்கா நீங்கள் இப்படி இருப்பியள் எண்டு நாங்கள் எதிர்பார்க்கயில்லை. நாங்கள் எல்லா தமிழ் மக்களுக்காகவும் தான் போராடுறம். எங்களுக்கு எல்லா வீடும் ஒண்டுதான் – எல்லாரும் எங்கட பெற்றோர் தான்''

பொன்னக்கா இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பழமையிலும், பிற்போக்குத்தனத்திலும் ஊறிப் போன மனிஷி அவள்.

அன்றிலிருந்து சில நாட்கள் அந்த இளைஞர்கள் பொன்னக்கா வீட்டுப்பக்கமே போவதில்லை.

சில நாட்கள் பொன்னக்கா எதிர்பார்த்தா. பிறகு எல்லா இடங்களிலும் அந்த இளைஞர்களைத் தேடிச் சென்று விசாரித்தா, காணாமல் போன தனது பிள்ளைகளைத்தேடும் ஒரு தாயின் மனநிலையுடன் எதிர்ப்படும் எல்லா போராளிகளிடமும் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு விசாரித்தா.

## இலக்கியத்திற்கான நோபல்பரிசு

கடந்த 1992 ம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல்பரிசு அமெரிக்காவிலுள்ள பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் ஆசிரியராகப்பணியாற்றும் டெரிக் வால்கார்ட் என்பவருக்கு வழங்கப் ட்டுள்ளது. அவரின் வயது 62. 36 நாடகங்களையும் 12 கவிதைத்தொகுதிகளையும் எழுதி வெளியிட்டுள்ளார் இவர் பெற்ற நோபல்பரிசின் மதிப்பு சுமார் மூன்றரைக்கோடி ரூபா.

ஒருநாள் ஒழுங்கையொன்றில் அந்த இளைஞர்கள் இருவர் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு விட்டு பொன்னக்கா அவர்களை நோக்கி ஓடினா.

இளைஞர்கள் வேண்டுமென்றே கண்டும் காணாதவர்கள்போல் சென்றனர். அவர்களை இடை மறித்த பொன்னக்கா சத்தமிட்டு அழுதேவிட்டா.

''தம்பியவை என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ வீட்டை வாங்கோ.''

பொன்னக்கா கெஞ்சியதைப் பார்த்ததும் அவர்களுக்கு பாவமாக இருந்தது.

மீண்டும் அங்கே போகத் தொடங்கினர். பொன்னக்கா நாளடைவில் அந்தக் கிராமத்திலேயே வித்தியாசமான ஒரு பெண்ணாகவும் பழமையான பிற்போக்குத் தனங்களிலிருந்து விடுபட்டவளாகவும் காணப்பட்டா. காலங்காலமாக அவள் மனதிலிருந்தவற்றை அந்தப் போராளி இளைஞர்கள் உடைத்தெறிந்தனர் என்றுதான் சொல்லவேண்டும்.

சில மாதங்களின் பின் அந்த இளைஞர்கள் வேறு மாவட்டத்திற்கு செல்லவேண்டியிருந்தமையினால் பொன்னக்காவின் வீட்டிலிருந்து நிரந்தரமாகவே விடை பெற்றுக்கொண்டனர்.

அதன்பின் அடிக்கடி தெரிந்தவர்களிடம் அந்த இளைஞர்களை பொன்னக்கா விசாரிப்பா. சந்தித்தால் ஒருமுறையாவது தனது வீட்டிற்கு வரும்படி சொல்லிவிடுவா.

அதன்பிறகு அந்த இளைஞர்களுக்கும் அங்கு செல்ல அவகாசம் கிடைக்கவில்லை.

சுமார் ஒரு வருடத்திற்கு பின்பு யாழ். வைத்தியசாலையில் கடுமையான நீரிழிவு வியாதியினால் பொன்னக்கா அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், கடைசியாக அந்த இளைஞர்களைப் பார்க்க விரும்புவதாக சொன்னதாகவும் ஒரு செய்தி அந்த இளைஞர்களில் இருவருக்கு கிடைத்தது.

இருநாட்கள் பிந்தி அவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று பொன்னக்காவைத் தேடினர்.

இருநாட்களுக்கு முன்புதான் அவர் உயிர் பிரிந்து உடல் முல்லைத்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டது என்ற செய்திதான் அவர்களுக்குக் கிடைத்தது.

அந்த நான்கு இளைஞர்களில் இருவரே இன்று உயிரோடு இருக்கின்றனர். அவர்கள் எப்போதாவது முல்லைத்தீவிற்கு செல்லும் போதெல்லாம் பழைய நினைவுகள் மனதை ஊடுருவும்.

அன்று போலவே இன்றும் அந்த வீதிகள், ஒழுங்கைகள் பொன்னக்காவின் வீடு, வீட்டு வளவினை போர்த்து நிற்கும் தென்னைமரங்கள், அந்த வேப்ப மரநிழல்... எல்லாமே அப்படியே இருக்கின்றன. இருந்தாலும், ஒரு தாயைப்போல் போராளிகளை அரவணைத்து உபசரித்த பொன்னக்கா மட்டும் இன்று அங்கு இல்லை. ☐

# புலனாய்வுக்கு உதவும் DNA பதிவு

Nallur Branch Library

நகரம் அன்று பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. மக்கள் நெருங்கி வாழும் ஒரு பகுதியில், பகல் வேளையில் கொலையுண்ட நடுத்தர வயதுடைய பெண்ணின் உடலைப் புலனாய்வுத்துறை மேலாளர்கள் பார்வையிட்டனர்.

கொலை செய்த குற்றவாளி கையுறையை அணிந்து பெண்ணின் கழுத்தை நெரித்துக் கொலை செய்திருந்தான்.

கொலையுண்டவரின் வலது கையில் சில தலை முடிகள் சிக்கியிருந்தன. அது தவிர ஆங்காங்கே சிதறிய இரத்தத் துளிகள் சிலவே புலனாய்வுத்துறை மேலாளர்கள் கவனத்திற்பட்டன.

புலனாய்வாளர்கள் கிடைத்த இரத்தத் துளிகளைக் கவனத்திற் கொண்டு வந்தனர். சேதமுறாதிருந்த DNA (De oxyribo Nucle ic Acid) மூலக்கூறுகள் எனப்படும் மரபணுக்களை, பக்குவமாகப் பிரித்தெடுத்தார்கள்.

பிரித்தெடுத்த இம் மூலக் கூறுகளைக் கழுவி சிறு துண்டுகளாக வேதி முறையில் கத்தரித்து உருக்கி ஒரே இழையாக்கிய பின்னர், இதை வைத்து DNA ரேகைப் பதிவு (DNA FINGER PRINT) ஒன்றைத் தயாரித்தனர்.

கொலையுண்டவரின் DNA ரேகைப் பதிவை விட முற்றிலும் வேறுபட்டிருந்த குற்றவாளியின் இரத்தமே தமக்குக் கிடைத்த தடயம் என்பதை உறுதிப்படுத்திய புலனாய்வுத் துறையினர், காவற் துறையினர் ஏலவே கைது செய்திருந்தவர்களை அணுகி அவர்களின் முடி—பல்அமைப்பு—இரத்தம் ஆகியவற்றைச்சோதனையிட்ட போது, இவருள் ஒருவனான கொலையாளி கையகப்பட்டான்.

கைரேகை போன்று ஒவ்வொரு மனிதரையும் வேறுபடுத்திக் காட்டும் பதிவாகிய DNA ரேகைப் பதிவென்னும் இரத்தத் துளி மூலக் கூறுகளைப் பிரித்துப் படமாக்கிக் காட்டும் இம் முறையானது குற்றவாளியை நம்பகமாக இனம் காண வைத்திட்டது. ☐

## உலகின் தலை சிறந்த கல்விக் கூடங்கள் 10

# ஜேர்மனியில் ஆசிரியர் பயிற்சிமுறை

ஜேர்மனியில் ஆசிரியத் தொழில் புரிவோர் நல்ல வருவாயைப் பெறுகின்றனர். வளமானவகையில் நடுத்தரக் குடும்பம் ஒன்றை நடத்த அவர்களால் முடியும். எல்லோரையும் கவரும் அரச திருவாகச் சேவை தகைமையை பெரும்பாலான ஆசிரியர்கள் பெறுகிறார்கள். அது அவர்களுக்கு சேவைக்கால உரிமைநிலை, வீடுகளைப்பெறுவதில் குறைந்த ஈட்டு வட்டிச் சலுகை, சமூகப்பாதுகாப்பு, வரிகளிலிருந்து விதிவிலக்கு ஆகியவற்றைக் கொடுக்கும். இவற்றிற்கானவிலை கடுமையான ஆசிரிய பயிற்சியாகும். இதனால் மிகச் சிறப்பானமாணாக்கர்கள்ஆசிரியத் தொழிலை நாடுகின்றனர். ஜேர்மனி நாட்டில் ஆசிரியர்கள் பெரும் சொத்தாகவும் மூலவளமாகவும் கணிக்கப்பட்டு பயிற்றப்படுகிறார்கள். இதற்கு எதிர்மாறான நிலை தமதுநாட்டில் இருக்கிறதென ஒரு அமெரிக்கப் பேராசிரியர் கவலைப்பட்டார்.

ஆசிரியவியலின் கோட்பாடுகளைக் கற்குமுன் ஆசிரியர்களாக விரும்புவோர் இரண்டு பட்டப் படிப்புப் பாடங்களை பூரணமாக கற்றிருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும். பல பாடங்களைக் கற்று மேல்நிலையில் இருப்பது தொடர்புகொண்ட பாடங்களைக் கற்பிப்பதற்கு உதவுகிறது. ஆசிரிய அத்தாட்சிப் பத்திரத்தை பெற விரும்பிய ‘தெக்ளா வொன்டொம் போயிஸ்’ என்ற பெண் மாணவி சமகாலத்தில் கோலோன் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்திலும் கோலோன் இசைக் கல்லூரியில் இசையிலும் முது கலைமாணிப் பட்டங்களை பெறவேண்டியிருந்தது. அவரது பத்து, அரை ஆண்டு படிப்புக்காலம் முழுவதும் ஆய்வுக் கட்டுரைகள், கலந்துரையாடலுக்கான கட்டுரைகள் தயாரிப்பதிலும் இறுதித் தேர்வில் தனது இருதுறைகளுக்கும் தொடர்பு உடைய ஆய்வுக் கட்டுரையும் அதைத் தொடர்ந்து ஒவ்வொன்றும் நாலு மணித்தியாலங்கள் கொண்ட மூன்று எழுத்து மூலமான பரீட்சைக்கும் ஒரு மணித்தியால நேர்முக தேர்வுக்கும் உள்ளாகவேண்டி இருந்தது. அவர்கள் ஆசிரியத் தொழிலை தன்னால் ஏற்க முடியுமா என பார்ப்பதற்கு மிகக் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்தனர் என்று இப்பெண் மணி கூறுகிறார்.

இதன் பின்னரே ஆசிரியர்பயிற்சி ஆரம்பமாகிறது. கற்பித்தல் பற்றிய வகுப்புக்களும் நடைமுறைப் பட்டறிவும் இணைந்த பண்பாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் இப்பயிற்சி இரண்டு ஆண்டுகால மிகவேலைப்பளுகூடிய பயிற்சியாகும். இங்குள்ள கலந்துரையாடற்குழு வாரத்தில் மூன்று தடவை சந்தித்து ஆசிரியவியல் கோட்பாடுகளை, கற்பிக்கும் கலை ஆகியவை பற்றி படிப்புகள் நடத்தும். வாரத்தில் ஒரு தடவை குறிப்பிட்ட ஒவ்வொரு பாடங்களின் நெறியாளர்கள் அரசபாடத் திட்டத்தை கற்றுக் கொடுப்பர்.

நடைமுறைப் பயிற்சி பற்றி குறிப்பிடுகையில் ‘தெக்ளா வொன் டொம்போயிஸ்’ தான் தினமும் காலையில் கோலோன் புறநகர்ப் பகுதியிலுள்ள உயர்கல்லூரி ஒன்றிற்கு சென்று தொடக்கத்தில் வகுப்பறையில் பின்னால் இருந்து அவதானித்ததாகவும் பின்னர் 4-6 வாரத்தில் கற்பித்தலில் தானாகவே ஆர்வம் வந்துவிடும் என்றும் கூறுகிறார். காலக்கிரமத்தில் அவருக்கு பாடம் கற்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அவ்வேளைகளில் உண்மையான ஆசிரியர் உடனிருந்து இவரை அவதானித்து குறைகளை விமர்சித்தும் புகழப்படவேண்டிய இடத்தில் புகழ்ந்தும், புத்திமதிகள் கூறியும் உற்சாகமளிப்பர். இரண்டு வருட காலத்தில் 25 தடவை வரை இவரது கலந்துரையாடல் நெறியாளர் இவரால் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்தின் கற்பித்தல் முறையை மதிப்பீடு செய்வார். இரண்டு ஆண்டின் பின் வரும் அரசினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் குறிப்பிட்ட பாடத்தின் பல பகுதிகளைத் தயாரித்து, கற்பித்து மதிப்பீடு செய்தல் வேண்டும். உதாரணத்துக்கு பிரித்தானியரின் நகைச்சுவையை மையமாக வைத்து ஆங்கிலத்தை எவ்விதம் கற்பிப்பது பற்றிய கோட்பாட்டை விளக்கும் அவரது ஆய்வுக்கட்டுரை 100 பக்கங்களை கொண்டதாயிருந்தது. இறுதியில் ஒவ்வொன்றும் 20 நிமிடங்கள் கொண்ட வாய்மொழிப் பரீட்சை, ஆங்கிலம், இசை, கல்விக்கோட்பாடு தொடர்பான பாடங்களில் நடைபெறும். அதன் பின்னரே உயர் கல்லூரிப் படிப்பிற்கான ஆயத்த பாடசாலைகள் என்ற ஜிம்னாசியப் பாடசாலைகளில் ஆசிரியராக கற்பிக்க அனுமதி வழங்கும் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது.

இப்படியான பயிற்சியின் பின்னர் வேலை கிடைக்குமென்பதிலும் உத்தரவாதமில்லை. தற்போது வேலையில்லாது 16.000 பேர் இத் துறையில் உள்ளனர். இத்தொகை இத்துறையில் ஈடுபடுவோரின் ஆர்வத்தையே பிரதிபலிக்கிறது. எனவே பல துறைகளில் ஆசிரிய பற்றாக்குறை உள்ள அமெரிக்காவுக்கு இவர்களை அனுப்ப எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஜேர்மனிய ஆசிரியர்கள் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் அமெரிக்காவில் நிலவும் மிகக் குறைந்தளவு தொழில் வசதிகளைப் பெறுவதைவிட காலம் தாமதித்தாவது ஜேர்மனியிலேயே வேலைவாய்ப்பைப் பெறவே அவர்கள் விரும்புகிறார்கள். ☐

## மனச்சோர்வு ஏன்

உலகமெங்கும் பரந்து வாழும் மக்களிடையே இன்று மனச் சோர்வு எனும் உளவியல் குறைபாடு கூடுதலாக உள்ளது என்பதும்; இம்மக்களின் தொகையில் ஆறுசத விகிதத்தினர் இக் குறைபாடுடையவர்களாக இருப்பதும், வியப்பான செய்தியாகவே இருக்கிறது.

ஓராண்டுக்கு முப்பதாயிரம் பேர் மனச்சோர்வு காரணமாகத் தற்கொலை செய்து கொள்ளுகிற அளவிறகு அமெரிக்காவிலேயே இக் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்றால் வளர்முக நாடுகளின் நிலையைச் சொல்லவா வேண்டும்.

இக் காலத்தில் நடைபெறும் பொது நலச் சீரமைப்புப் பணிகளுள், மக்களின் வாழ்வின் சுவையை அற்றுப் போகச் செய்யும் வெறுமை நிலையை ஏற்படுத்தும் மனச் சோர்வை அகற்றுவதே முதலிடப் பணியாக விளங்குவதால் இதற்கெனப் பல பணிமனைகளை ஆரம்பித்து ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் டொலர் செலவையும் அமெரிக்க அரசு செய்து வருகின்றது.

மனச் சோர்வுடன் பேசுதல், அமைதியாகப் பேச்சற்று இருத்தல், பொறுமையை இழத்தல், சீறிச் சினந்து விழுதல், சிரிப்பற்று முகத்தைத் தூக்கமாகக் காட்டுதல், எரிந்து விழுதல், காரணமின்றிப் பொருட்களை உடைத்துச் சேதமாக்குதல், குழந்தைகளுக்கு கொடூரமாக அடித்தல், தன்னைத்தானே தாக்கிக்கொள்ளுதல், போன்ற செயல்கள்மூலம் ஒருவரின் மனச்சோர்வு வெளிப்பாட்டை உணர முடிகிறது.

மனித வயது ஏறஏற மனச் சோர்வு பெறும் மக்கள் மனத்தை மகிழ்விக்கப் பொழுது போக்குப் பயணங்களைப் பயன்படுத்துகின்றனர்.

வாழ்வின் அடுக்கடுக்கான தோல்விகளிலிருந்தும், உடல் பலமின்மையிலிருந்தும், பெரும்பாலும் தோன்றும் இம் மனச் சோர்வு நிலை எவ்வித காரணங்களின்றியும் தோன்றலாம் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

கட்டளை பிறப்பிக்கும் மூளையுடனும், கட்டளைகளைச் செயற்படுத்தும் உணர்வு, நரம்பியக்கங்கள் ஆகிய இரண்டும் உடலியக்கப் பகுதிகளுடன் நெருங்கிய தொடர்புடையதாக மனச் சோர்வு இருக்கிறதென்பதும் அவதானிகள் கருத்து.

எது எவ்வாறு இருப்பினும் மனச் சோர்வுக்கு செரோடான் இயக்கக்குறைவுபிரதான காரணம் என்றே பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். □

## கலைச்சொல் அகராதி

**Benign neglect**: ஆத்திரமூட்டாது நிராகரி. பிரதானமாக இது ஓர் இராஜதந்திர சொற்பிரயோகமாகும். விருப்பமற்ற எதிரியாய் இருந்தாலும்கூட அவனை ஆத்திரமூட்டாது விடுதலே சிறந்தது எனக் கருதப்படுமிடத்து எதிரியுடன் நடந்துகொள்ளும் ஒரு முறையைக் குறிக்கும் பதமாக இது அமைந்துள்ளது. அதாவது எதிரியுடன் ஒட்டுறவிருக்காது ஆனால் அவனுடன் முகம் பார்த்துப் பழகக்கூடிய உறவிருக்கும்.

**Prima Facie**:- குத்துமுகம் அல்லது குத்துமுகத் தோற்றம்; இது சட்டம், இராஜதந்திரம், மெல்லியல் ஆகிய துறைகளில் பிரயோகம் பெறும் சொல்லாகும். ஒரு விடயத்தைப் பார்த்தவுடன் பொதுவாகவும் பிரதானமாகவும் தோன்றும் ஓர் அபிப்பிராயமே இதுவாகும்.

**Fascism**:- கொடுங்கோண்மை: இது ஓர் அரசியல் வரலாற்றுப் பதமாகும். தமிழில் இதனை பாசிஸம் என்று எழுதும் பழக்கமுண்டு. இதனை தமிழில் விளங்கிக்கொள்ள ஏறக்குறைய ஏற்ற பதமாகக் கொடுங்கோண்மை என்றழைக்கலாம். ஆனால் பாசிஸம் என்பது அந்த வார்த்தையுடனேயே ஒரு நடைமுறை அர்த்தத்தைப் பெற்றுவிட்டது என்றும் கூறலாம். இது லத்தீனை மூலச் சொல்லாகக் கொண்டு தோன்றிய ஓர் இத்தாலிய மொழிச் சொல்லாகும். இப் பதத்தின் மூல அர்த்தம் பல சுள்ளிகளை ஒன்றாக இணைத்துக் கட்டுதலால் தோன்றும் பலம் என்பதைக் குறிக்கிறது. அதாவது ஐக்கியமே பலம் என்பதாகும். இது முசோலினி தனது கட்சிக்கு வைத்த பெயராகும். இப் பதத்தின் நடைமுறை அர்த்தம் தேசியவெறி, எதேச்சாதிகாரம், எதிரிகளை ஈவிரக்கமின்றி ஒடுக்குதல், விஸ்தரிப்புவாதம் ஆகிய அனைத்தையும் இணைத்த ஒன்றாகும் அழகிய தோற்றம், அருவருக்கத்தகுந்த செயல் என்று இப் பதத்தை விளக்கலாம்.

**Strain relation**:- நெருக்கடியான உறவு: இது ஓர் அரசியல் இராஜதந்திரப் பதமாகும். குறிப்பாக நாடுகளுக்கு இடையேயான உறவை இது குறித்து நிற்கின்றது. அதாவது ஒரு நாட்டுடன் இன்னொரு நாட்டின் உறவு கொதிநிலை அடைந்திருப்பதை அல்லது சீர்கெட்டிருப்பதை இது குறிக்கின்றது.

**Condemn**:- கண்டனம்: இது ஒரு அரசியல் இராஜதந்திரப் பதமாகும். உள் நாட்டிலாயினும் சரி, வெளிநாட்டிலாயினும் சரி, நாடுகளுக்கு இடையேயாயினும் சரி ஒரு குறித்த அரசியல் விடயத்தை ஏற்காது வெளியிடப்படும் ஒரு அபிப்பிராயமே கண்டனம் என்பதாகும். இதன் அடுத்த கட்டக் கடும் வார்த்தைப்பிரயோகம் Strong Condemn - வன்மையான கண்டனம் என்பதாகும். □

# ஒத்துழைக்க மறுக்கவில்லை.

—ஞானகுரு—

"சண்டை சச்சரவு இல்லாமல் சமாதானமாக வாழுறது தான் திறமான வாழ்க்கை எண்டு நீங்கள் அடிக்கடி சொல்லுறனீங்கள்தானே வாத்தியார்?''

''ஓம் சொல்லுறனான். அதிலை இண்டைக்குச் செல்லையாவுக்கு ஏன் சந்தேகம் வந்தது?''

''சந்தேகம் இல்லை. சிங்களவரும் தமிழரும் சமாதானமாக வாழாமல் சண்டைபிடிக்கிறது பிழை எண்டு என்ரை மனதுக்குப் படுகுது.''

"நானும் அதைத்தான் வாத்தியார் சொல்லுறன். சிங்கள மக்களோடை ஒத்துழைச்சு எங்கடை உரிமையைப் பெறுகிறதுதான் புத்திசாலித்தனம். சண்டைக்குப் போனதாலை எவ்வளவு அழிவு? எத்தினை உயிர்கள் பலியாகிப் போச்சுது? எத்தினை கோடி ரூபா நட்டம் வந்திட்டுது?''

"சண்டை துவங்க முன்னம் தமிழருக்கு இழப்புகளும் அழிவுகளும் வரயில்லையோ கனகேந்திரம்? நீங்கள் நீண்டகாலம்

## வாத்தியார் வீட்டு விறாந்தை

கொழும்பிலை இருந்து உத்தியோகம் பாத்தனீங்கள். சண்டை துவங்க முன்னம் நடந்த இனக் கலவரங்களிலை தமிழர் கொல்லப்பட்டதும் தமிழற்றை சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் உங்களுக்குத் தெரியத்தானே வேணும்.''

''அப்ப, வாத்தியாரும் சண்டைக்குத்தான் ஆதரவோ?''

''அப்பிடிச் சொல்லாதையும் கனகேந்திரம். நான் சமாதானத்துக்குத்தான் ஆதரவு. நான் மட்டுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்துக்குத்தான் ஆதரவு. ஆனால் சண்டை தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்குது.''

''உப்பிடித்தான் கனயோர் சொல்லுகினம். உது சும்மா ஏமாத்துக் கதை.''

''ஏமாத்துக் கதையில்லை. எங்கடை முந்தின தலைவர்மார் சிங்கள மக்களாலை தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களோடை நல்லாக ஒத்துழைச்சவை. ஒப்பந்தங்கள் செய்தவை. பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் கிழிச்செறியப்பட்டுது. டட்லிக்கும் செல்வநாயகத்துக்கும் இடையிலை ஏற்பட்ட ஒப்பந்தம் இடைநடுவிலை கைவிடப்பட்டுது. ஜே. ஆருக்கும் அமிர்தலிங்கத்துக்கும் இடையிலை ஏற்பட்ட உடன்பாட்டின்ரை அடிப்படையிலை தான் மாவட்ட சபைத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தல் நேரத்திலை அமைச்சர்மாரே யாழ்ப்பாணத்துக்கு வந்து நூலகத்தை எரிக்கிறதுக்கும் அதைத் தொடர்ந்த அழிவுகளுக்கும் வழி வகுத்தினம்.''

''உதெல்லாம் சரிதான் வாத்தியார். ஆனால், சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய தாயகம் போன்ற கோஷங்கள் தான் எல்லாத்துக்கும் காரணம். உந்தக் கோஷங்கள் மிகவும் பாதகமானவை எண்டு சிங்கள மக்கள் நினைக்கினம். உதுகளை அடிக்கடி சொல்லுறதாலை அவையின்ரை மனதிலை ஒரு அச்சம் வளருது. அதாலைதான் பிரச்சனையைப் பேசித் தீர்க்க ஏலாமலிருக்குது. உந்தக் கோஷங்களைக் கைவிட்டால் பேசித் தீர்க்கிறத்துக்குச் சுமுகமான நிலை வரும். எங்களுக்குப் பலகாரம் தான் தேவை. சிலுசிலுப்பு வேண்டாம்.''

## தேன் பழுதாகாமல் இருப்பதற்குக் காரணம்

தேனீ மலர்களிலிருந்து சேகரிக்கும் தேனை கூட்டிற்குள் கொண்டு செல்லும்போது, வயிற்றுக்குள் வைத்தே கொண்டு செல்கிறது. வயிற்றுக்குள் இதற்கென ஒரு பை உண்டு. இந்தப் பையிற்குள்ளிருக்கையில்தான் பூந்தேன் சில இரசாயன மாறுதல்களுக்குள்ளாகிறது. அதிலிருக்கும் சர்க்கரை வகைகள் மாற்றமடைகின்றன. தேன் இவ்வாறான மாறுதல்களின்பின்தான் தேன் கூட்டில் சேகரிக்கப்படுகின்றது. பின்னர் சூடும், காற்றோட்டமும் சேர்ந்து தேன் இறுகுகிறது. அதிலிருக்கும் ஈரம், தண்ணீர் பெரும்பாலும் நீக்கப்பட்டுவிடுகிறது. இந்தவிதத்தில் நீர் நீக்கப்படுவதாலும், தேனீயின் வயிற்றில் ஏற்படும் இரசாயன மாற்றம் காரணத்தினாலும் தேன் அதிகநாள் கெடாமல் இருக்கிறது.

"இண்டைக்கு எங்கடை 'பிர தான பிரச்சனை தமிழற்றை தாயகம் பறிபோறதைத் தடுக்க வேணும் எண்டதுதான். நீர் சொல்லுற உந்தக் கோஷங்கள் முன்வைக்கப்பட்டதாலை தமிழற்றை தாயகம் பறிபோனதோ-அல்லது தாயகம் பறிக்கப்பட்டது தான் உந்தக் கோஷங்களுக்குக் காரணமோ எண்டதை யோசிச்சுப் பாக்கவேணும். தாயகம் பறிக்கப்படுகிறதைத் தடுக்கிறத்துக்குத்தான் உந்தக் கோஷங்கள் எழுந்தன. தமிழற்றை சுயநிர்ணய உரிமையையும் தமிழருக்கு ஒரு தாயகம் இருக்குது எண்டதையும் ஏற்றுக்கொள்ளுகிற அடிப்படையிலைதான் பேச்சுவார்த்தை நடத்தவேணும். அந்த அடிப்படையிலை ஒத்துழைக்கிறதுக்குத் தமிழ் மக்கள் ஒருக்காலும் மறுக்கயில்லை.''

"இப்ப முக்கியமான பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொண்டு பிறகு தாயகம், சுயநிர்ணய உரிமை எண்டதுகளைப் பற்றிப் பேசலாம்தானே வாத்தியார்?''

"முக்கியமான பிரச்சினை எது எண்டதிலை சண்முகராசாவுக்குத் தடுமாற்றம் இருக்குது போலை. தமிழற்றை தாயகம் கொஞ்சங் கொஞ்சமாகப் போகுது. அது சிங்களப் பிரதேசமாக மாறிக்கொண்டு வருகுது, கல்லோயா முழுக்கப் போயிட்டுது. அம்பாறை முக்கால்வாசி போயிட்டுது. திருகோணமலை போய்க்கொண்டிருக்குது. வவுனியா போகத் தொடங்குகிறது. இந்த நிலையிலை எது முக்கியமான பிரச்சினை? நிலம் பறிபோறதைத் தடுக்கிறதுதான். அதாலை தான் சுயநிர்ணய உரிமை, தாயகம் எண்ட கோஷங்களைத் தமிழர் முன்வைக்கினம்.''

"இப்ப நீங்கள் என்ன சொல்லுறியள்? சமாதானமோ அல்லது சண்டையோ?''

"அது அரசாங்கத்தைப் பொறுத்த விசயம். நான் முந்திச் சொன்னதைப்போலை, பிரச்சனைக்கு அடிப்படையான விசயங்களிலை அரசாங்கம்உடன்பாட்டுக்கு வருமெண்டால் சமாதானமாக ஒத்துழைச்சுத் தீர்க்கத் தமிழர் தயார். அதை விட்டிட்டு, முந்தின காலங்களைப்போலை, அடிப்படை விசயங்களிலை தொடாமல் பேய்க்காட்டுப் பேச்சுவார்த்தை நடத்துறதாலை எந்த விதப் பலனும் இல்லை எண்டதைத் தமிழ் மக்கள் பூரணமாக உணர்ந்திட்டினம்.'' ☐

---

## பல பயன் தரும் பப்பாளி

எமது கண்ணுக்கு அவசியமான உயிர்ச்சத்துக்களான -ஏ-சி- என்பனவும், உடல்வளர்ச்சிக்குதவும் கல்சியம், இரும்பு, பொஸ்பரஸ், புரதம் ஆகியனவும் பப்பாயின் அல்லது பாப்பின் என்ற வேதிப்பொருளும் நிறையக் காணப்படுவது பப்பாளிமரத்தின் காய்களில் தான்.

C—o5,—Co—3,—Co—4,—Co—6 ஆகிய பப்பாளி இனங்களே பப்பாயின் பெறுவதற்கு ஏற்றது என்பதைப் பல முறை நடத்திய சோதனைமூலம் கோயம்முத்தூர் விவசாயப்பல்கலைக்கழகம் கண்டறிந்துள்ளது.

வளரும் குழந்தைகளுக்கு உணவு சீராகச் செரிக்கவும், தோல்கள்பற்றிய நேபய்கள் குணமாகவும், பாப்பின் பயன்படுகின்றது. தவிரவும் முகத்தை அழகு படுத்திடப் பயன்படும் முகக்குழம்பு (கிறீம்) தயாரிக்கவும் மூலப்பொருளாகப் பயன்படும் பப்பாயினுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுவருகின்றது.

பப்பாயின் பெறுவதற்கு வழியாக எண்பது நாட்கள் கடந்த பப்பாளிக் காய்களைக் கண்டுணர்ந்து அவற்றில் மெல்லிய கத்தி கொண்டோ – அல்லது செதுக்கப்பட்ட கூரிய மரத்துண்டு கொண்டோ கீறி, கீறப்பட்ட இடங்களிலிருந்து வடியும் பாலை, சட்டி போன்ற மட்பாண்டம் அல்லது, அதற்கென்று வடிவமைக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்களை உபயோகித்துப் பெற்றுச் சேகரித்துக் கொள்ளலாம்; சேகரிக்கும் பொழுது கிழமைகளில் ஒருமுறை அதிகாலை, அல்லது மாலைப் பொழுதுகளில் மட்டும் காய்களைக் கீறிப் பாலை எடுக்கவேண்டும்.

மெக்சிக்கோவிலிருந்து உலகம் முழுதும் பரவிய பப்பாளி இனம் போர்த்துக்கீசர் மூலமாக இந்தியாவில் கோவாவில் நுழைந்தது. வயிறு சம்பந்தமான நோய்களுக்கும் சிறப்பாகத் தேள்கடி, பூச்சிகடி போன்றவைகளுக்கும் பப்பாளிவிதை வலிபோக்கியாக உள்ளூர் வைத்தியர்களால் பயன்படுத்தப்பட்டது; பயன்படுத்தப்பட்டும் வருகின்றது.

மிகுந்த பயனைத் தரவல்ல பப்பாளியை எமது வீடுகளில் வளர்த்து நல்ல பயன்பெற முயலுவோம்.

## பலவன் பதில்கள்

எம். கணேஸ்வரன்,
புதுக்குடியிருப்பு

**கே:** பல்கலைக்கழகத்துக்குச் செல்லாமல் அறிஞராக முடியுமா?

**ப:** ஆம்.

வே. ரேணுகா,
இந்துமகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**கே:** இடதுசாரி – வலதுசாரி என்பதன் அர்த்தம் என்ன?

**ப:** ஐரோப்பாவின் ஆரம்பகாலப் பாராளுமன்றங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காகக் குரல் கொடுப்பவர்களும் புரட்சிகரமான சிந்தனைகளுக்குட்பட்டவர்களுமான முற்போக்கு வாதிகள் குறைவானவர்களாகவே இருந்தனர். எனவே இவர்கள் எதிர்க்கட்சியினர். பாராளுமன்றத்துக்குத் தலைமை வகிப்பவரின் இடது பக்கத்தில் அமர்பவர்கள். இதனால், இடதுசாரிகள்என அழைக்கப்பட்டனர். பிற்போக்குவாதிகள் ஆளுங்கட்சியினர் என்பதால் வலது பக்கத்தில் அமர்ந்தனர். எனவே வலதுசாரிகள்என அழைக்கப்பட்டனர். குறிப்பிட்ட கொள்கைகளைப் பின்பற்றுவோரை இப்போது இப்பதங்களால் அழைக்கின்றனர்.

மு. முருகமூர்த்தி,
புத்தூர்.

**கே:** பஞ்சமர் என்றால் என்ன?

**ப:** நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட ஐந்து சாதியினர். அவர்களும் தமிழன்னையின் தவப்புதல்வர்களே. எங்கள் சகோதரர்களே.

கே. வில்சன்,
நாவாந்துறை.

**கே:** அமெரிக்காவின் புதிய அதிபர் பில் கிளிண்டன் மூலம் உலக நாடுகளுடனான அமெரிக்க அணுகுமுறைகளில் நல்லமாற்றங்கள் உருவாகுமா?

**ப:** பொறுத்திருந்து பார்ப்போம்.

து. இராகினி,
நுணாவில்.

**கே:** சமஷ்டி என்றால் என்ன?

**ப:** மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களைப் பிராந்திய அல்லது மாநில மட்டத்தில் பகிர்ந்தளிக்கும் ஆட்சிமுறையே சமஷ்டி. ஒவ்வொரு சமஷ்டி அமைப்பும் தனது பிரதேசத்துக்குள்ளான சகல விடயங்கள் தொடர்பாகவும் பூரண அதிகாரங்களைக் கொண்டிருப்பதே உண்மையான சமஷ்டி ஆகும்.

எஸ். மகேந்திரன்.
பளை.

**கே:** வடக்கு, கிழக்கில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் போரில் கொல்லப்படும் போது இல்லாத பரபரப்பு கொழும்பில் ஒரு இராணுவ அதிகாரி கொல்லப்படும்போது ஏற்படுவது ஏன்?

**ப:** கொழும்பு, பேரினவாத அரசயந்திரத்தின் இருதயப்பகுதி என்பதால்.

ப. சிவகணேசன்,
மீசாலை.

**கே:** போராட்டத்தில் இலக்கியகர்த்தாக்களின் பங்கு என்ன என்று தாங்கள் எண்ணுகின்றீர்கள்?

**ப:** கலை இலக்கிய நடவடிக்கைகளுக்கு ஒரு குறிக்கோள் வேண்டும். சமுதாய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதே அக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். தமிழ்ச் சமுதாயம் தன்னை எதிர்நோக்கும் பாதிப்புகளை அகற்றி வளர்ச்சி அடைவதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கான இந்தப் போராட்டத்துக்கு இலக்கியகர்த்தாக்கள் தங்கள் படைப்புகளின் மூலம் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

என். நடனசேகரம்,
கைதடி.

**கே:** அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கிக் கொள்ளை லாபம் அடையும் வியாபாரிகளுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

**ப:** பட்டினி போட வேண்டும்.

த. மோகனதாஸ்,
மானிப்பாய்.

**கே:** 'Balance of Power' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ப் பதம் யாது?

**ப:** 'ஒப்பு வலிமை' என்று சொல்லலாம்.

ஜெ. கோகுலன்,
இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**கே:** சிங்கள அரசும் அதன் கைக்கூலிகளும் எம் கல்வியை நசுக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதன் விளைவாக எம் தமிழ்ச் சந்ததியின் எதிர்காலம் பற்றிய உங்கள் கருத்து யாது?

**ப:** அறிவு வளர்ச்சிக்கு யாரும் தடை போட முடியாது. நெருக்கடிகளுக்கு மத்தியிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் 199 புள்ளிகள் எடுத்த மாணவனைப் பாருங்கள். □

உடுவிலில் உங்கள் மனங்கவர்ந்த
வியாபார ஸ்தாபனம்.

**பலசரக்குப் பொருட்கள்**
**'பான்சி' பொருட்கள்**
**பால்மா வகைகள்**

இவற்றை நியாயமான விலைகளில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# செல்வராஜா ஸ்ரோர்ஸ்

**மான்ஸ்கூல் ஒழுங்கை,**
**உடுவில்.**

# போர் சூழலிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை!



பிருந்தாபன்

கல்வி நிலையங்கள் ஏதிலிகள் வதிவிடங்களாக மாறி வரும் சோகம் ஒரு புறமும், வானூர்திகளின் துணை கொண்டு குண்டுகளை வீசி தமிழீழக் கல்வி நிலையங்களைச் சிதைக்கும் கொடுமை மறுபுறத்தும் நிகழ்கின்ற இவ்வேளையிலும், தளராத ஊக்கத்துடன், கல்வியைக் கருத்துடன் ஊன்றிக் கற்று; ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் மூவரைச் சந்தித்தோம்.

போராட்ட சூழலில் மண உறுதி தளராது கல்வி கற்ற இம்மாணவர்களின் உள்ளத்து உறுதியும், திறமையும்; எம் உள்ளத்தே உவகை சேர்க்கிறது.

யாழ் புனித சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த மாணவனாகிய காந்தகுமார் பிருந்தாபன் 199 புள்ளிகள் பெற்று முழு இலங்கை அளவில் ஆகக் கூடுதலான புள்ளி பெற்ற மாணவனாக திகழ்கின்றார்.

தாயின் ஊக்கத்துடனும், தாம் கற்ற பாடசாலை வகுப்பாசிரியர் திருமதி அ. ஆரோக்கியநாதர், இப்பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெறோம் ஆகியோரின் வழிகாட்டல்களுடனும் கல்வியில் தேர்ச்சி பெற்ற இம்மாணவன் இடது கைப்பழக்கமுள்ளவர். சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கையாலும், போர் அழுத்தங்களினாலும் எவ்வகையிலும் தளர்வுறாது, மிகுந்த ஊக்கமும், உறுதியும் கொண்டு இவர் கல்வி கற்றார் என்கின்றார் இவருடைய தாயார். நாமும் இக்கூற்றை மதிக்கின்றோம்.

197 புள்ளிகளைப் பெற்றவர்களில் ஒருவரான சாந்தகுமார் மோகனஜீ என்பவர், யாழ்/ ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் மாணவர். இவர் தன் வெற்றிக்கும் கல்விப் பயிற்சிக்கும் உதவிய வகுப்பாசிரியரான செல்வி வதனி சம்பந்தருக்கு நன்றி கூறுகின்றார். வசதிகள் குறைந்த அளவிலுள்ள இப்பாடசாலையில் கல்வி

(26 ம் பக்கம் பார்க்க)

## ஓவியம் வாக்கியம் பதில்

## வேகுவதெப்போ?


கெஞ்சிடும் பசிவயிற்றில்
நெருப்பெரியத் துடிதுடித்து
மிஞ்சிடும் ஏழ்மையாலே
'அரை' க்கு மேலுடை துறந்து
பஞ்செனக் கருகுமிந்தக்
கறை படிந்த ஏழை நாட்டில்
வஞ்சகச் சிரிப்புடனே
நஞ்சுவைப்பார்! 'வல்லரசோர்'

குடிக்கவோ பாலுமின்றிக்
குழந்தைகள் அழ இவர்கள்
கொட்டிடுவர் குண்டுகளாய்க்
குலைத்து வைப்பர் சீர் வாழ்வை
வெடித்து எழும் பிரச்சினைகள்
வேர்விடவே நீர் தெளிப்பர்
நடித்திடுவர் - உலகதற்கு
'நாயகர் தாம்' என உரைப்பர்!

அழும்வயிறு சிரிப்பதற்கு
வழங்குதற்கு வளமிருந்தும்
விழுங்கிடவும் விழுத்திடவும்
அழித்திடவும் எண்ணுகின்ற
'நலன்' கெடுத்தே ஏழை நாட்டை
நரித்தனத்தால் ஆட்டுமிந்த

வல்லரசுப் பேய்கள் கொட்டம்
வேகுமெப்போ வேள்வியிலே?

— த. அன்பழகன்.
யாழ். இந்துக் கல்லூரி



நன்றி: சிரித்திரன்

# அரும்புகள்

## சிறந்த உதாரணம்

கொடிய ஊனுண்ணிக்கு
சிறந்த உதாரணமெது?
எனக் கேட்டு
மாணவரை மடக்கி விட்ட
பெருமையுடன்
தலை நிமிர்ந்தேன் .........

அப்போ .........
உதிக்கும் திசையிலிருந்து
ஊர்விட்டு வந்திருந்த
மாணவனொருவன்
பட்டென்றெழுந்து
சொன்னான்
சிறீலங்கா இராணுவப்
படையென்று!

-மு. விஜயராகவன்,
யாழ் / இந்துக் கல்லூரி.

## உப்பு !

வல்லை வெளியிலே
உப்பள்ளும் திருவிழா
கூட்டமோ கூட்டம்
ஒரு தேர்க் கூட்டம்
வெளியில் வழியில்
கொட்டுண்டு சிதறிக் கிடந்த
உப்பு முத்துக்களின்
பளீரிடும் வெண்மை
உப்புக் கிள்ளும்
சிறார்களின் பற்களோடு
போட்டியிட்டுத் தோற்கும்!
படிப்பும் மறந்து
பாட்டும் மறந்து
கண்களில் பசியுடன்
சோர்வும் மின்ன
நம்பிக்கையோடு
உப்புக் கிள்ளும்
சிறுவர்கள்......... !
இவர்கள் எதிர்காலம்
உப்புத்தானா?

-அகிலா - பசுபதி.

## தமிழர்க்கு இனிதான தை மாதம்

தை பிறந்தால் வழி பிறக்கும்
தரணி எங்கும் வாழ்வு சிறக்கும் - எங்கள்
கை ஓங்கும் கலி நீங்கும்
காலம் புது வாழ்வு காட்டும்

உழவர்க்கு உவப்பான தை மாதம்
உலகெலாம் சிறப்பான திம் மாதம்
இளையோர்க்கு இனிப்பான தை மாதம்
இனிதான வாழ்வுக்கு வழிகாட்டும்

நெல் முற்றி வளமாகும் -உழவர்
நெஞ்சத்தில் மகிழ்வேறும் தை மாதம்
இல்லம் உயர்வோடு வாழ
இனிதாக வரும் இந்த தை மாதம்

பொங்கல் பொங்கிடும் மங்களம் தங்கிடும்
புலவர் பாடிடும் இனிதான தை மாதம்
எங்கும் தமிழர் உயர்வோடு - என்றும்
இலங்கிட செய்யும் இனிதான மாதம்

-கேந்திரன்,
அரியாலை.

### போர் சூழலிலும்.........

( 25ம் பக்கத் தொடர்ச்சி)

பயின்ற இம்மாணவனின் உயர்வுக்கு இக் கல்வி நிலையத்தின் அதிபரான கே. கணேசனும் காரணமாவார் என்கிறார் இவரின் தாய்.

197 புள்ளிகளைப் பெற்ற மற்றைய மாணவி செகராசா அகல்யா; சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கிறார். யாழ்மாவட்ட தமிழ்தின நிகழ்வில் உறுப்பெழுத்து எழுதும் போட்டி நடைபெற்றபோது முதலிடத்தைத் தக்கவைத்த இச்சிறுமியின் எழுத்துக்கள் கண்டு பலர் மகிழ்வுற்றனராம்.

இம்மாணவியின் கல்விக்கு ஊக்கம் கொடுத்தவர்களில் கல்லூரி அதிபர் எல். பி. ஜெயவீரசிங்கம், வகுப்பாசிரியர் செல்வி அமுதா சோமசுந்தரம் ஆகியோர் வகித்த பங்கு போல; ஆசிரியை யோகமணி தங்கநாயகம் அவர்களும், 'சிசிலியன்' கல்வி நிலைய நிருவாகிகளான திரு - திருமதி சி. பி. ம. ஆரோக்கிய நாதர் அவர்களும் வகித்த பங்கு அளப்பரியது என்கிறார் இம்மாணவி, சிசிலியன் கல்வி நிலையத்தினரும் இக்கருத்தை இசைவுடன் கூறினர்.

தனியார் கல்வி நிலையங்களை நம்பியிராது சுயமுயற்சியினாலும் பாடசாலைகளில் பெற்ற கல்வியினாலும் தாம் வெற்றி பெற்றதாகவே ஏனைய இரு மாணவர்களும் கூறுகின்றனர்.

– மு. இ. யோ.

Nallur Branch Library

விளையாட்டு

# மாவீரர் மேஜர் முரளி, ராஜேந்தர் சுற்றுக் கிண்ணங்கள்

19 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை சென் கென்றிஸ் கல்லூரி, மாவீரன் மேஜர் முரளி சுற்றுக் கிண்ணத்தை வென்றது.

17வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் வெற்றி பெற்று மாவீரன் இராஜேந்தர் சுற்றுக் கிண்ணத்தை வென்றது.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளுக்கிடையே லீக் முறையில் இவ் உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.

முதன் முறையாக இவ்வாண்டு மாவீரன் மேஜர் முரளி சுற்றுக் கிண்ணமும், மாவீரன் இராஜேந்தர் சுற்றுக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

இதில் வெற்றி பெற்ற இரண்டு பாடசாலைகளில் கென்றிஸ் கல்லூரியினர் இளவாலையில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் 19 வயதுக்குட்பட்டோர் போட்டியில் முதன்மை இடத்தையும், 17 வயதுக்குட்பட்டோர் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திற்கு விளையாடப் பெரிய திடல் இருக்கவில்லை.

19 வயதிற்குட்பட்டோர் விளையாட்டு அணி



படத்திலுள்ளோர் இடமிருந்து வலமாக:- (நிற்பவர்கள்) ரி. அன்ரனி றொபர்ட், ஏ. மைக்கல் கொலின், பேரின்பம் வீனஸ் பிரபாகரன், ப. அன்ரன் ஜோர்ஜ், ஏ. டொமினிக் செல்ரன், ப. அன்ரன் தனபாலசிங்கம் தயானந்தன், வி. ஞானதீபன், தே. செல்வராஜ், ஜீவானந்.

மற்றும், ச. யா. தேவநேசன், எவ். ஏ. பாலதாஸ், ஏ. மரியநிமலன், ஆர். எம். ஜோய் ராஜ்குமார், க. ரவிச்சந்திரன். (இவர்கள் படத்தில் இல்லை)

படத்தில் அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக:- திரு. எம். எஸ். லிங்கநாதன், அதிபர் கலாநிதி அருட் திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், துணை அதிபர், அருட் திரு. ஜே. ஏ. ஜேசுதாஸ், பிரதி அதிபர் திரு. கிளைவ் அரியரத்தினம்,ஏ. ஜே. சௌந்தரநாயகம் ஆகியோர்.

கீழே அமர்ந்திருப்போர்:- எம். றொபர்ட்சாயி, ஜே. ஜோ. சுதாகரன் (விளையாட்டு அணியினர்)

17 வயதிற்குட்பட்டோர் விளையாட்டு அணி



படத்திலுள்ளோர் இடமிருந்து வலம் (நிற்போர்) து. ஞானேந்திரன், செ. கட்வின் ஜோய், சூ. என். நோர்ட்டன், ச. யூட்குமார், த. சசீதரன், கொ. பிரபாகரன், கு. லக்ஷ்மிலன், எஸ். ஜீவானந்தன், யோ. றோகன், அ. டன்சன் ஜோசப்.

இடமிருந்து வலம் (இருப்போர்) விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. இ. ஈஸ்வரமூர்த்தி, ம. லியோனிஸ், உபதலைவர் கிறிஸ்ரியன் பேர்னாட், அதிபர் திருமதி. பி.எவ். சின்னத்துரை, அ. அல்வின் அலெக்ஸ், திரு. கி. கிறிஸ்தோப்பர், கீழே அமர்ந்திருப்போர் தே. பிறிற்னோ, அ. நோபஸ்ரின் ஆனந்தி, ம. ஜெயலக்ஷ்மன்.

மற்றும், கு. சுஜித், யோ. கிருபானந்தன், து. குலேந்திரன், எஸ். விஜித்குமார், (இவர்கள் படத்தில் இல்லை)

இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி — இடம் பெயர்ந்துள்ளோம், வசதிகள் இல்லை என்று தளர்ந்து நிற்காமல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இப் பாடசாலைகளின் முன்னுதாரணத்தை பாராட்டி மகிழாமல் இருக்க முடியவில்லை.

## சென். கென்றிஸ் கல்லூரி — இளவாலை

புனிதசூசையப்பர் சபையைச் சார்ந்த வணக்கத் திற்குரிய சகோதரர்களினால் இக்கல்வி நிலையம் தோற்றுவிக்கப்பட்டது.

1973ன் முன்னரும் நலிவும், மறு பொலிவும் பெற்று இக்கல்விக் கூடம் வந்திருப்பினும் 1973ல் அருட்தந்தை ஜோன்பிரான்சிஸ் அடிகளார் நிருவாகத்தைப் பொறுப் பேற்று அதிபராய் வந்த பின்னர் உதைபந்தாட்ட விளையாட்டில் இந் நிலையம் நல்வளர்ச்சி கண்டது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட விளையாட்டுப் போட் டியில் கலந்து கொண்ட இவர்கள் 1974ல் இருபது வயதுக்குள்ளான வயதினருக்குரிய சிங்கர் வெற்றிக் கேடயத்தை இரண்டாம் நிலையில் நின்று பெற்றனர். பின்னர் 1975ல் அதே வெற்றிக் கேடயத்தை முதல் நிலையில் நின்று இப்பாடசாலையின் அணி பெற்றுக் கொண்டது.

தவிரவும்,1976ல் ஏரிக்கரை செய்தித்தாள் நிறுவனம் நடத்திய 19 வயதுக்குள்ளான உதைபந்தாட்டப் போட் டியில், கலந்து கொண்டு முதலிடத்தையும் அதற்கான நினைவுக் கிண்ணத்தையும் இவர்கள் பெற்றுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து 1992ல் நடைபெற்ற மாவீரன் மேஜர் முரளி நினைவுப் போட்டியில் பத் தொன்பது வயதுக்குட்பட்ட அணியினர் பங்கு கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றுத் தம் பாடசாலையின் முன்னைய மதிப்பைத் தக்க வைத்துக் கொண்டனர்.

ஆசிரியர் ரி. பத்மநாதன் அவர்கள் இப்பாடசாலை உதைபந்தாட்ட அணியின் நெறியாளராகச் செயல் பட்டார். இவரின் மறைவு வேதனைக்குரியது என்கி றார்கள் ஆசிரியர்கள்.

## புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயம்

1876ம் ஆண்டு 5ம் மாதத்தில் புனிதர் சாள்ஸ் றோமன் கத்தோலிக்கப் பள்ளிக் கூடம் உருவானது. இதை உருவாக்கிய பெருமை திருக்குடும்பக் கன்னி யர்களைச் சேரும்.

இப்பள்ளிக் கூடத்து உதைபந்தாட்ட அணியினர் 1985 - 1986ல் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை களிடையே முறையே இரண்டாம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை நினைக்கத் தக்கது.

1992ல் மாவீரன் ராஜேந்தர் உதைபந்தாட்ட வெற் றிக் கிண்ணத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

தவிரவும், இவ் விளையாட்டு அணித் தலைவரான செல்வன் அ. அல்வின் அலக்ஸ் அவர்கள், 400 மீற்றர்- 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றியீட்டி இக் கல்வி நிலையத்திற்குப் புகழீட்டிக் கொடுத்துள்ளார்.

இவ்வணியினரின் முன்னேற்றத்தின் பொருட்டு உழைப்பவர்களாக திரு. கிளமேந்து கிறிஸ்தோப்பர், திரு. இராமநாதன் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் விளங்கு வதாக மாணவர்கள் குறிப்பிட்டனர்.

—மு. இ. யோ.

### மூளைக்கு கொஞ்சம் வேலை பதில்.

1. எடை வித்தியாசமாக இருக்கும். கிளியின் எடை மட்டும் குறைவாக இருக்கும்.
2. ஒன்பது நிமிடங்களில்.

## விண்வெளி விடயம்

சொந்த 'றொக்கெட்' மூலம் செயற்கைக் கோளைச்செலுத்திய ஆசியநாடுகள் மூன்றுதான். இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் தாம் இவை. மற்றநாடுகள் அமெரிக்கா, பிரான்சு, ரசியா ஆகியவையாகும்.

சந்திரனில் இறங்கிய முதல் செயற்கைக் கோள் 'லூனா - 9' என்னும் ரசிய செயற்கைக் கோளாகும். இது 1966 ல் சந்திரனில் இறங்கி யது.

விண்வெளிக்குச் சென்ற முதல் வீரனான யூரிககாரின், 'வோஸ்டாக்-1, என்ற செயற்கைக் கோள் மூலம் மணிக்கு 17,560 மைல் வேகத் தில் 108 நிமிடங்கள் கழித்து தரை இறங்கினார். ஏழு ஆண்டுகளின் பின் ஒரு ஜெட்விமான விபத் தில் யூரிககாரின் கொல்லப்பட்டார்.

கடந்த 1992 ம் ஆண்டை உலகம் முழுவதும் விண்வெளி ஆண்டாகக் கொண்டாடியது.